683



# செந்தமிழ்

# கோவை

OFFICE OF ... MADRAS
27 AUG 1957

நான்காம் படிவம்

626

சிறப்புப் பகுதி

TB
031 (9)
N57

எண்டர்பிரைஸஸ்

...கோணம்.

# செந்தமிழ்க் கோவை

## நான்காம் படிவம் — சிறப்புப் பகுதி

**

ஆக்கியோன்:
ரம்போலா மாஸ்கரேனஸ், M. A.
தமிழ்த்துறைத் தலைவர்
ஸெயின்ட் ஜோஸப் கல்லூரி, திருச்சிராப்பள்ளி

Approved by the Text-Book Committee, Madras.
Vide Page 17 (Part II) of the Fort St. George Gazette dated 10—4—57)

**

*[Printed on 16 lbs. Demy White Printings]*

பப்ளிஷர்ஸ்:
**எஜுகேஷனல் எண்டர்பிரைஸஸ்**
கும்பகோணம்

பதிப்புரிமை]

விலை 12 அணா / 75 நயா பைசா

Reprinted: July 1957

TB 031(9) N57

88762

# முகவுரை

செந்தமிழ்க் கோவை என்ற பெயருடன் வெளிவரும் இப்பாட நூல்கள் நம் தமிழ் நாட்டு மாணவ மாணவிகள் படித்துப் பயன்பெறுமாறு எழுதப்பட்டுள்ளன.

இப்பாடநூல்கள் சென்னை அரசின் கல்வித் துறையினர் அண்மையில் (1952) வெளியிட்டுள்ள புதிய பாடத் திட்டங்களுக்கேற்ப ஒவ்வொரு படிவத்திற்கும் பொது, சிறப்பு என்ற இரண்டு பகுதிகளாகத் தொகுக்கப்பட்டுள்ளன. பாடத் திட்டத்தின் விதியை உளங்கொண்டே இக்கோவைகளில் இலக்கியம், ஆராய்ச்சி, அறிவியல், வரலாறு, நாட்டுணர்ச்சி முதலிய கட்டுரைகள் உரைநடைப் பகுதியில் அமைக்கப் பெற்றுள்ளன. அது போலவே செய்யுட் பகுதியும் பழமையும், புதுமையும் அமையத் தொகுக்கப்பட்டுள்ளது. ஆங்காங்கு பொருள் விளக்கம், வினாக்கள் பயிற்சிக்கு வேண்டுமளவு தரப்பட்டுள்ளன.

இந்நூல்களில் தத்தம் செய்யுட்களையும் கட்டுரைகளையும் சேர்த்துக்கொள்ளுமாறு தம் இசைவினை வழங்கிய பேரறிஞர்களுக்கும், இவை வெளிவர உதவிபுரிந்த கும்பகோணம், நகராட்சி உயர்நிலைப் பள்ளித் தலைமைத் தமிழாசிரியர், வித்துவான் சோ. மாணிக்கம் அவர்களுக்கும் எனது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

புதிய பாடத்திட்டத்தின் அமைப்பெல்லாம் நன்கு பொருந்த அமைந்திருக்கும் இந்நூலை மாணவ மாணவிகள் பயின்று பயன்படச் செய்யும் ஆசிரியர்களுக்கும் அதிகாரிகளுக்கும் என் மனமார்ந்த நன்றி உரியது.

திருச்சிராப்பள்ளி,
15—9—1955.

ரம்போலா மாஸ்கரேனஸ்

## பொருளடக்கம்

### செய்யுட் பகுதி


| பொருள் | | பக்கம் |
|---|---|---|
| I. வாழ்த்து | | |
| 1. குறுந்தொகை | .... | 1 |
| 2. திருவாசகம் | ... | 1 |
| 3. திருப்பாவை | ... | 2 |
| II. அறவுரை | | |
| 1. சிறுபஞ்சமூலம் | .... | 3 |
| 2. ஏலாதி | ... | 3 |
| 3. அறநெறிச்சாரம் | ... | 4 |
| III. காதை | | |
| 1. வில்லி பாரதம் | ... | 6 |
| 2. இரட்சணிய யாத்திரிகம் | ... | 9 |
| 3. அரிச்சந்திர புராணம் | ... | 11 |
| IV. பல்சுவை | | |
| 1. சிவன் பட்ட பாடு | .... | 18 |
| 2. சிலேடை | ... | 18 |
| 3. கையறம் | ... | 18 |
| 4. நாரை விடு தூது | ... | 18 |
| 5. குறவஞ்சி | .... | 19 |
| 6. முல்லை (ஐந்திணை ஐம்பது) | ... | 19 |
| 7. குறிஞ்சி | ... | 20 |
| 8. மருதம் | ... | 20 |
| 9. பாலை | ... | 20 |
| 10. நெய்தல் | .... | 20 |
| 11. புறநானூறு | ... | 21 |
| 12. சுதந்திரச் சிறப்பு | | 21 |


### உரைநடைப் பகுதி


| | | |
|---|---|---|
| 1. பழைய உரைநடை (இளங்கோவடிகள் & நக்கீரர்) | .... | 24 |
| 2. மனுநீதி சோழர் (சிதம்பரம் இராமலிங்க அடிகள்) | .... | 26 |
| 3. நாகப்பட்டினம் (டாக்டர் மா. இராசமாணிக்கனர், M.A., L.T.) | ... | 31 |
| 4. தமிழன் உள்ளம் (வித்துவான் சி. இராசகோபால பிள்ளை) | ... | 37 |
| 5. சுட்ட பன்றி (பூ. ஆலாலசுந்தரஞ் செட்டியார், M. A.) | .... | 45 |
| 6. வாணிகம் (வித்துவான் தி. சி. குழந்தைவேல் முதலியார்) | ... | 51 |
| 7. நலங்கிள்ளியும் கோவூர் கிழாரும் (ஆ. கார்மேகக் கோனர்) | ... | 56 |
| குறிப்புரை | ... | 61 |

# நாட்டு வணக்கம்

ஜன கண மன அதிநாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
பஞ்சாப ஸிந்து குஜராத மராட்டா
த்ராவிட உத்கல வங்கா
விந்திய ஹிமாசல யமுனு கங்கா
உச்சல ஜலதி தரங்கா
தவசுப நாமே ஜாகே
தவசுப ஆசிஷ மாகே
காயே தவ ஜய காதா
ஜன கண மங்கள தாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
ஜய ஹே, ஜய ஹே, ஜய ஹே,
ஜய ஜய ஜய, ஜய ஹே!

# தேசீய கீதம்

இந்தியாவின் சுகதுக்கங்களை நிர்ணயிக்கிற நீதான்
மக்கள் எல்லோருடைய மனத்திலும்
ஆட்சி செலுத்துகிருய்.

நின் திருநாமம், பஞ்சாப்பையும் சிந்துவையும்
குஜராத்தையும் மஹாராஷ்டிரத்தையும்
திராவிடத்தையும் ஒரிஸாவையும் வங்காளத்தையும்
உள்ளக் கிளர்ச்சி யடையச்செய்கிறது.

அது விந்திய ஹிமாலய மலைகளில் எதிரொலிக்கிறது;
யமுனை, கங்கை நதிகளின் இன்ப நாதத்தில் கலக்கிறது;
இந்தியக் கடல் அலைகளால் ஜபிக்கப்படுகிறது.

அவை நின் ஆசியை வேண்டுகின்றன;
நின் புகழைப் பாடுகின்றன.

இந்தியாவின் சுகதுக்கங்களை நிர்ணயிக்கிற உனக்கு
வெற்றி, வெற்றி, வெற்றி!

# செந்தமிழ்க் கோவை

## நான்காம் படிவம் — சிறப்புப் பகுதி

# செய்யுட் பகுதி

## I. வாழ்த்து

### 1. குறுந்தொகை

[குறுந்தொகை என்பது எட்டுத் தொகை நூல்களில் ஒன்று. குறுகிய அடிகளையுடைய (4 அடி முதல் 8 முடிய) 400 பாக்களைக் கொண்ட ஒரு தொகை நூல். இப்பாடல் குறுந்தொகையின் கடவுள் வாழ்த்தாகும். இதனைப் பாடியவர் பாரதம் பாடிய பெருந்தேவனார் என்பவர்.]

1. தாமரை புரையும் காமர் சேவடிப்
பவழத் தன்ன மேனித் திகழொளிக்
குன்றி ஏய்க்கும் உடுக்கைக் குன்றின்
நெஞ்சுபக எறிந்த அஞ்சுடர் நெடுவேல்
சேவலங் கொடியோன் காப்ப
ஏம வைகல் எய்தின்றால் உலகே.

—பாரதம் பாடிய பெருந்தேவனார்

### 2. திருவாசகம்

[திரு + வாசகம் = திருவாசகம். இறைவனது புகழ் பாடும் நூல் என்பது பொருளாகும். சைவத் திருமுறை பன்னிரண்டில் 8-ஆம் திருமுறையைச் சேர்ந்தது. இதனைப் பாடியவர் மாணிக்கவாசகர் என்பவர். இவர் சைவ சமய குரவர்களில் ஒருவர்; பாண்டி நாட்டுத் திருவாதவூரில் பிறந்தவர்; காலம் கி. பி. 9-ஆம் நூற்றாண்டு; துறைமங்கலம் சிவப்பிரகாசர் இதனைப் பெரிதும் புகழ்ந்து பாடியுள்ளார்.]

2. கீத மினிய குயிலே! கேட்டியேல், எங்கள் பெருமான்
பாத மிரண்டும் வினவில் பாதாள மேழினுக் கப்பால்
சோதி மணிமுடி சொல்லிற் சொல்லிறந்து நின்றதொன்மை
ஆதி குணமொன்று மில்லான் அந்தமி லான்வரக் கூவாய்.

—மாணிக்கவாசகர்

## 3. திருப்பாவை

[திருமாலிடம் அன்பு பூண்ட பன்னிரு ஆழ்வார்களில் ஆண்டாளும் ஒருவர். மார்கழித் திங்களில் ஆயர்பாடி மகளிர் பாவை நோன்பு நோற்குங் கால் பாடுவதாக அமைந்த பாடல்களாதலின் 'திருப்பாவை' என்னும் பெயர் பெற்றது. சூடிக்கொடுத்த நாச்சியார் என்பது ஆண்டாளின் மற்றொரு பெயர். பெரியாழ்வாரின் நன்மகளாகப் பிறந்த இவர் கி. பி. 8-ஆம் நூற்றாண்டினர்.]

3. வையத்து வாழ்வீர்காள் நாமும்நம் பாவைக்குச்
செய்யுங் கிரிசைகள் கேளீரோ பாற்கடலுள்
பையத் துயின்ற பரமன் அடிபாடி
நெய்யுண்ணோம் பாலுண்ணோம் நாட்காலே நீராடி
மையிட் டெழுதோம் மலரிட்டு நாம்முடியோம்
செய்யா தனசெய்யோம் தீக்குறளைச் சென்றோதோம்
ஐயமும் பிச்சையும் ஆந்தனையும் கைகாட்டி
உய்யுமா றெண்ணி உகந்தேலோர் எம்பாவாய்.

—ஆண்டாள்

# குறிப்புரை

1. புரையும் - ஒத்த; புரையும், அன்ன, ஏய்க்கும் - உவம உருபுகள். காமர் - அழகிய; செம்மை + அடி = சேவடி - பண்புத்தொகை; திகழ் - விளங்கும்; குன்றி - குன்றிமணி; உடுக்கை - ஆடை (காரணப் பெயர்): பக - பிளக்க; அம்சுடர் - அழகிய ஒளி (வீசும்); ஏமம் - பாதுகாவல், இன்பம்; வைகல் - நாள்.

2. கீதம் - இசை; கேட்டிஎல் - கேட்பாயாக; வினவில் - (எங்குள்ள தெனக்) கேட்டால்; சோதிமணிமுடி - ஒளி வீசும் அழகிய திருமுடி; இறந்து - கடந்து; அந்தமிலான் - முடிவில்லாதவன்; கூவாய் - ஏவலொருமை வினைமுற்று.

3. கிரிசைகள் - செயல்கள்; பைய - மெல்ல; நாள்கால் - வைகறையில்; தீ + குறளை = தீக்குறளை - தீமைதரும் புறங்கூறல்; உகந்து ஏல் - விரும்பி ஏற்றுக்கொள்; பாவை என்பது விளியில் பாவாய் என வந்தது.

### வினாக்கள்

1. எட்டுத் தொகை நூல்கள் யாவை?
2. திருவாசகம், திருப்பாவை – பெயர்க்காரணந் தருக.
3. உலகைப் பாதுகாப்பவன் யாவன்?
4. முருகக் கடவுளைப் பாரதம் பாடிய பெருந்தேவனார் எங்ஙனம் போற்றுகின்றார்?

5. மணிவாசகர் கூறும் பெருமானது பெருமைகளை எழுதுக.
6. 'ஆதிகுணமொன்று மில்லான் அந்தமிலான்'—யார்? இத்தொடரால் நாமறிவதென்ன?
7. பாவை நோன்பில் மகளிர் மேற்கொள்ளும் செயல்கள் யாவை?

# II. அறவுரை

## 1. சிறுபஞ்சமூலம்

[கண்டங் கத்திரி, சிறுவழுதுணை, சிறுமல்லி, பெருமல்லி, நெருஞ்சி என்பவைகளின் வேரே சிறுபஞ்சமூலம் எனப்படும். இவ்வைந்தும் மக்களின் பிணி போக்குதல்போல் பாடற் கருத்துக்கள் பிறவிப்பிணி போக்குதலின் சிறு பஞ்சமூலம் எனப் பெயர்பெற்றது. பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் இதுவும் ஒன்று. இதனைச் செய்தவர் காரியாசான் என்பார்.]

1. சிலம்பிக்குத் தன்சினை கூற்றநீள் கோடு
விலங்கிற்குக் கூற்ற மயிர்தான் — வலம்படா
மாவிற்குக் கூற்றமா ஞெண்டிற்றுத் தன்பார்ப்பு
நாவிற்கு நன்றல் வசை.

2. மயிர்வனப்புங் கண்கவரு மார்பின் வனப்பும்
உகிர்வனப்புங் காதின் வனப்பும் — செயிர்தீர்ந்த
பல்லின் வனப்பும் வனப்பல்ல நூற்கியைந்த
சொல்லின் வனப்பே வனப்பு.

3. வான்குருவிக் கூடரக்கு வாலுலண்டு கோற்றருதல்
தேன்புரிந் தியார்க்குஞ் செயலாகா — தாம்புரீஇ
வல்லவர் வாய்ப்பன வென்னூர் ஒரோவொருவர்க்
கொல்காதோ ரொன்று படும்.

—காரியாசான்

## 2. ஏலாதி

[ஏலம் + ஆதி = ஏலாதி. ஏலம் முதலான பொருள்கள் மக்களது உடல் நோயைப் போக்குதல் போல் இந்நூலின் பாடலிலுள்ள கருத்துக்கள் மாந்தரது அறியாமைப் பிணியைப் போக்குந் தன்மையவாம்; பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்று. இந்நூலின் ஆசிரியர் கணிமேதையார். இவர் மாக்காயனார் என்பவரது மாணவராவார்; சமண சமயத்தினர்; கடைச் சங்க காலத்தினர்.]

1. குடியோம்பல் வன்கண்மை நூல்வன்மை கூடம்
மடியோம்பும் ஆற்ற லுடைமை — முடியோம்பி
நாற்றஞ் சுவைகேள்வி நல்லா ரினஞ்சேர்தல்
தேற்றுனேல் தேறும் அமைச்சு.

2. கொல்லான் கொலைபுரியான் பொய்யான் பிறர்மனைமேல்
செல்லான் சிறியார் இனஞ்சேரான் — சொல்லும்
மறையிற் செவியிலன் தீச்சொற்கண் மூங்கை
இறையிற் பெரியாற் கிவை.

3. குறுகான் சிறியாரைக் கொள்ளான் புலால்பொய்
மறுகான் பிறர்பொருள் வெளவான் — இறுகானாய்
ஈடற் றவர்க்கீவான் ஆயின் நெறிநூல்கள்
பாடிறப்ப பன்னு மிடத்து.

—கணிமேதையார்

## 3. அறநெறிச்சாரம்

[அறம் + நெறி + சாரம் = அறநெறிச்சாரம். அறநெறிகளில் முக்கியமானவற்றைக் கூறுவதால் இப்பெயர்பெற்றது. இதனைச் செய்தவர் முனைப்பாடியார்; சமண சமயத்தவர்; காலம் கி. பி. 15-ஆம் நூற்றாண்டு.]

1. காய்தல் உவத்தல் அகற்றி ஒருபொருட்கண்
ஆய்தல் அறிவுடையார் கண்ணதே—காய்வதன்கண்
உற்றகுணந் தோன்றாத தாகும் உவப்பதன்கண்
குற்றமும் தோன்றாக் கெடும்.

2. பலகற்றோம் யாமென்று தற்புகழ வேண்டா
அலர்கதிர் ஞாயிற்றைக் கைக்குடையும் காக்கும்
சிலகற்றார் கண்ணும் உளவாம் பலகற்றார்க்கு
அச்சாணி யன்னதோர் சொல்.

3. இன்சொல் விளைநிலமா ஈதலே வித்தாக
வன்சொற் களைகட்டு வாய்மை யெருவட்டி
அன்புநீர் பாய்ச்சி அறக்கதிர் ஈனவோர்
பைங்கூழ் சிறுகாலைச் செய்.

4. முன்னின் றொருவன் முகத்தினும் வாயினும்
கன்னின் றுருகக் கலந்துரைத்துப்—பின்னின்(று)
இழித்துரைக்கும் சான்றோரை அஞ்சியே தேவர்
விழித்திமையா நின்ற நிலை.

—முனைப்பாடியார்

# குறிப்புரை

1. 1. சிலம்பி-சிலந்தி; நெடுமை + கோடு = நீள்கோடு (பண்புத்தொகை); வலம்-வெற்றி; மா-கவரிமான்; ஞெண்டு-நண்டு (மொழி முதற் போலி); பார்ப்பு-குஞ்சு; நன்று + அல் = நன்றல்-நன்மை தராத.

2. வனப்பு-அழகு; உகிர்-நகம்; செயிர்-குற்றம்.

3. வான்குருவி - தூக்கணங் குருவி; அரக்கு - செந்நிற மெழுகு; வால் - தூய்மை; உலண்டு - உலண்டு என்னும் ஒருவகைப் புழு; தாம்புரீஇ-தாம் விரும்பி; புரீஇ-சொல்லிசையளபெடை.

2. 1. ஓம்பல் - பாதுகாத்தல்; வன்கண்மை - வீரம்; கூடம் - கரவு; மடி - சோம்பல்; முடி - அரசாட்சி; சுவை - இனிய உணவு; தேறும் - தெளியப்படுவான்.

2. புரியான் - விரும்பி ஏற்கமாட்டான்; மனை - மனைவி (இடவாகு பெயர்); மறை - இரகசியம்; மூங்கை - ஊமை.

3. சிறியார்-கீழ்மக்கள்; பொய் மறுகான் - பொய் சொல்லமாட்டான்; வெளவான் - விரும்பமாட்டான்; பன்னுதல் - சொல்லுதல்.

3. 1. காய்தல் - வெறுத்தல்; ஆய்தல் - ஆராய்தல்; தோன்றாக் கெடும்- ஈறுகெட்ட எதிர்மறை வினை எச்சம்.

2. அலர்கதிர்-வினைத்தொகை; கைக்குடை-சிறுகுடை, கையிலுள்ள குடை; அச்சாணி - தேரின் சக்கரம் கழலாமல் செருகும் ஆணி.

3. வன்மை + சொல் = வன்சொல்-கடுஞ்சொல்; கட்டு - நீக்கி; எரு அட்டி-எருவினைப்போட்டு; பைங்கூழ்-பசுமையான பயிர். இப்பாடல் முற்றுருவகம்.

4. கல்நின்று உருக - கல்லும் கசிந்துருக; (இழித்துரைக்கும்) சான்றோர்-இகழ்ச்சிக் குறிப்பில் வந்தது (வஞ்சப் புகழ்ச்சியணி).

### வினாக்கள்

1. ஏலாதி, சிறுபஞ்சமூலம்—பெயர்க் காரணங் கூறுக.
2. சிலம்பி, விளங்கு, நண்டு என்னுமிவைகளுக்குக் கூற்றமாவன யாவை?
3. எவையெவை அழகாகா? எது உண்மை அழகாகும்?
4. தற்பெருமை பேசுதல் கூடாதென்பதைக் காரியாசான் எங்ஙனம் விளக்கி உரைக்கிறார்?
5. அமைச்சனாதற்குரியவனது இயல்புகள் யாவை?
6. பெருந்தன்மை உடையவரின் நற்பண்புகளைக் குறித்திடுக.

7. யாருக்கு அறிவு நூல்கள் வேண்டியதில்லை?
8. பொருள்களை எம்முறையில் ஆராய்தல் வேண்டும்?
9. விருப்பு வெறுப்பின்றிப் பொருளை ஆராயவேண்டிய அவசிய மென்ன ?
10. தற்புகழ்ச்சி கூடாதென்பதை அறநெறிச்சாரம் எங்ஙனம் வலியுறுத்துகின்றது?
11. பைங்கூழ் பயிர்செய்யப்படும் முறையை எழுது.
12. வஞ்சப் புகழ்ச்சி அணி இன்னதென்பதை ஒரு பாடலால் விளக்கு.

---

# III. காதை

## 1. வில்லி பாரதம்

### உத்தியோக பருவம்

### கிருட்டினன் தூது சருக்கம்

[வில்லிபுத்தூர் ஆழ்வாரால் செய்யப்பட்ட பாரதமெனப் பொருள்படும். வடமொழி வியாச பாரதத்தை மொழிபெயர்த்து வில்லிபுத்தூரார் தமிழில் இதனைப் பாடியுள்ளார். இதிகாசம் இரண்டனுள் பாரதமும் ஒன்று.

வில்லிபுத்தூரார் நடுநாட்டு சனியூரில் பிறந்தவர்; வைணவ அந்தணர்; வடமொழிப் புலமையும் உடையவர்; வக்கபாகை ஆண்ட வரபதியாட்கொண்டான் என்பவனுல் ஆதரிக்கப்பட்டவர்; செய்ந்நன்றி மறவாத இவர் அவனைத் தம் நூலிற் புகழ்ந்து பாடியுள்ளார்.

பாண்டவர்க்கும் கௌரவர்க்கும் போர் நடப்பது உறுதியாயிற்று. கன்னனைப் பாண்டவர் பக்கம் சேர்க்க முயன்ற கண்ணன் தோல்வியுற்று, கன்னனின் வலியைக் குறைக்க எண்ணி இந்திரனைக் கிழ அந்தணன் உருக்கொண்டு கன்னனிடம் செல்லப் பணிக்கின்றுன்.]

1. தண்டு தாளெனக் குனிந்துடல் அலமரத்
 தாளிணை தளர்ந்துதள் ளாடக்
கண்டி யாவரும் கைதொழக் கவித்தகைக்
 குடையுடன் கங்கைநீர் நுரையை
மொண்டு மேலுறச் சொரிந்ததாம் எனநரை
 திரையுடன் மூப்பொரு வடிவம்
கொண்ட தாமென ஒருமுனி யாகியே
 கொற்றவன் வாயில் சென்றடைந்தான்.

2. அருத்தி ஈதல் பொன் சுரதரு வினுக்குமற்(று)
அரிதுநீ அளித்தியோ என்று
விருத்த வேதியன் மொழிந்திட நகைத்துநீ
மெய்யுயிர் விழைந்திரந் தாலும்
கருத்தி ளேடுனக்கு அளித்திலேன் எனின்எதிர்
கருத்தவர் கண்ணிணை சிவப்ப
உருத்த போரினில் புறந்தரும் நிருபர் போய்
உறுபதம் உறுவனென் றுரைத்தான்.

3. வந்த அந்தணன் கவசகுண் டலங்களை
வாங்கிநீ வழங்கெனக் கென்னத்
தந்த னன்பெறு கெனஅவன் வழங்கவிண்
தலத்திலோர் தனிஅச ரீரி
இந்தி ரன்தனை விரகினல் மாயவன்
ஏவினுன் வழங்கல்நீ எனவும்
சிந்தை யின்கணோர் கலக்கமற் றளித்தனன்
செஞ்சுடர்த் தினகரன் சிறுவன்.

[இந்திரன் சென்றபின் கண்ணன் குந்தியைக் கன்னனிடம் அனுப்பி வைக்க, வந்த குந்தியைக் கன்னன் வரவேற்கிறுன்.]

4. வந்து குந்திநின் கோயில்எய் தினன்என
வாயிலோர் உரைத்திட, மைந்தன்
முந்தும் அன்புடன் தொழுதெதிர் கொண்டுநன்
முறைமையால் ஆசனத் திருத்தி,
இந்து வின்கதிர் கண்டுமேன் மேலுமுற்
றிரங்கிவான் கரைகடந் தேறும்
சிந்து வெண்திரைச் சிந்துவொத் துருகுறும்
தெரிவையோ டுரைசில செப்பும்.

5. அன்னை வந்ததென் அருந்தவப் பயனென
அன்பினுல் இன்புற வணங்கி
என்னை வந்தவா றென்னமற் றவளுமே
ஈன்றதாய் யான்உனக் கொன்று
முன்னை வந்தொரு மந்திரம் தவமுனி
மொழிந்ததும் கதிரவன் அருளால்
பின்னை வந்ததும் பேழையில் விடுத்ததும்
பிழையிலா துரைத்திடக் கேட்டே

6. மாய ஞர்விர(கு) இதுவென மனத்தினில்
மதித்துவந் தளித்திடும் வள்ளல்
நீய நாளெனைப் பயந்தவள் என்னினும்
நின்மொழி நெஞ்சுறத் தேறேன்
பேய ஞர்சிலர் பேரறி வின்மையால்
பெற்றதாய் எனக்கென வந்து
தூய நாகரின் அமைந்ததோர் துகிலால்
துன்பம்உற்(று) என்புரு ஆனுர்.

7. அடாது செய்தவர் படாதுபட் டனர்எனும்
அங்கர்கோன் அருள்மொழி கேட்டுத்
தடாத அன்புடைக் கெடாததூஉ மொழிபகர்
தையலும் மையலின் தவிர்ந்து
படாம தென்கையில் தருகென வருதலும்
பயந்திலேன் எனின்எனை முனிஎன்(று)
எடா விரித்தலைத்(து) உடற்படப் போர்த்தெதிர்
ஈன்றதாய் ஆமென இருந்தாள்.

8. வருகஎன் மதலாய், இளைஞர் ஐவரும்நின்
மலரடி அன்பினல் வணங்கி
உரிமையால் மனமொத் தேவலே புரிய
ஒருதனிச் செய்யகோல் ஓச்சி
அரசெலாம் வந்துன் கடைத்தலை வணங்க
ஆண்மையும் செல்வமும் விளங்கக்
குருகுலா திபர்க்கும் குரிசிலாய் வாழ்வு
கூர்வதே கடனெனக் குறித்தாள்.

9. பெற்றநீர் மகவன் பிலாமையோ அன்றிப்
பெரும்பழி நாணியோ விடுத்தீர்
அற்றைநாள் தொடங்கி என்னையின் றளவும்
ஆருயிர்த் துணையெனக் கருதிக்
கொற்றமா மகுடம் புனைந்தர சளித்துக்
கூடவுண் டுரியதம் பியரும்
சுற்றமா னவரும் என்அடி வணங்கத்
தோற்றமும் ஏற்றமும் அளித்தான்,

10. மடந்தைபொன் திருமே கலைமணி உகவே
மாசறத் திகழும்ஏ காந்த
இடந்தனிற் புரிந்தே யான்அயர்ந் திருப்ப
எடுக்கவோ கோக்கவோ என்றான்
திடம்படுத் திடவேல் இராசரா சனுக்குச்
செருமுனைச் சென்றுசெஞ் சோற்றுக்
கடன்கழிப் பதுவே எனக்கினிப் புகழும்
கருமமும் தருமமும் என்றான்.

—வில்லிபுத்தூராழ்வார்

## 2. இரட்சணிய யாத்திரிகம்

### (நிதான பருவம்) அழிம்பன் தோல்விப் படலம்

[John Bunyan என்பாரது Pilgrim's Progress என்னும் ஆங்கில நூலை ஆதாரமாகக் கொண்டது இந்நூல். H. A. கிருஷ்ணப் பிள்ளை என்பாரே இந்நூலாசிரியர். கிறித்தவப் பள்ளிகளில் தமிழாசிரியராக விளங்கிய பெரும் புலவர். பாண்டிய நாட்டுக்குக் கரையிருப்பில் பிறந்தவர். காலம் கி. பி. 1827—1900.]

கிறித்தவன் பேரொலி கேட்டல்

1. ஆயிடைத் தமியனாய் அருள்வழிச் செலும்
தூயவன் நெஞ்சகம் துணுக்குற்(று) ஏங்கிடக்
காய்உரும் இடித்தெனக் கதித்து ஓர்பேரொலி
ஏஎனும் மாத்திரத்(து) எழுந்த தெஞ்சவே.

அவன் அஞ்சி ஆலோசனை செய்தல்

2. பேரொலி முழக்கினால் பேதுற்(று) உள்ளுடைந்(து)
ஆரியன் அடிபிச காதுநின்(று) இவண்
மாரி இன்றாக அச்சுறுத்த வந்தஇக்
காரி யம்யா(து) எனக்கருதும் காலையில்.

அழிம்பனைக் காணுதல்

3. பேயும் அஞ்சுறு பெரும்பேய் முகத்தினன்
காய்எரி பங்கியின் கடுத்து நும்கொடு
வாயினன் வக்கிர தந்தன் வன்கணன்
தீ எழு புகைஎன உயிர்க்கும் தீயவன்

கிறித்தியானுக்கு, அழிம்பன் எதிர்ப்படுதல்

4. இப்படு பாதக னழிம்ப னென்பவன்
மெய்படு கிறித்தவன் விழிக்கு நேரெதிர்
கைப்படக் காண்டலுங் கலங்கி யுள்ளழிந்(து)
எப்படி யெனக்கினி யுய்வென் றெண்ணுவான்.

அழிம்பன் கிறித்தியானை நோக்கி,

5. உங்கரித் தழிம்பன்வந் துருத்து நோக்கிநின்(று)
"எங்குளை? எங்குசெல் கிற்றி? யாரைநீ?
நுங்குமுன் புலப்பட நுவறி நொய்" தென்றான்
கங்குலும் பகல்படக் கருகு நெஞ்சினன்.

கிறித்தியான் பதில் கூறுகிறான்

6. "நாசதே சத்துளேன் நாசதே சத்தில்
நீசவெவ் வினைகுடி நிலவிற் றுதலின்
மோசமு நாசமு முடுகு மென்றமெய்
வாசகங் கேட்டதை வரைந்து வீசினேன்.

7. வீவினை விரும்பிடா விட்புலத் துயர்
கோவினுக் கேயடித் தொழும்பு கூடினேன்
சாவினை விளைக்கவென் முதுகிற் றங்கிய
தீவினைச் சும்மையுந் தெறித்து வீழ்ந்ததால்!

8. நித்திய மங்கள நிகழ்சு கானந்த
முத்திமா நகர்செல முடுகு கின்றனன்
எத்திறம் நுங்கருத்து! இராச பாதையின்
மத்தியில் யானுளன்! மனக்கொள் நீ" என்றான்.

அழிம்பன் அதற்குப் பதில் கூறுகிறான்

9. "பொற்புறு நாசதே சத்துப் போந்து, நீ
அற்புத வளநுகர்ந் தாயுள் நாளெலாம்
முற்படு காமியம் முழுதுந் துய்த்திரு
பிற்படு கதிநினைந் திரங்கிப் பேதுறேல்.

10. இணங்குவா யெனிலிக சுகத்தை யீகுவல்
பிணங்குவா யெனிலுயிர் பிழிந்து தேக்குவல்
உணங்கியோய்! எதுதுணி(பு) உரைத்தி" என்றனன்
நிணங்கெழு குருதிவேல் நிசாச ரேசனே.

கிறித்தியான் அதற்கு மறுத்துக் கூறுகிறான்

11. "எண்ணரிய தீவினை யியற்றியுள னேனும்
நண்ணியமன த்துயரும் நாடுபெறு மூச்சுங்
கண்ணருவி நீர்சொரி கருத்தும்நனி கண்டு
புண்ணியர் பொறுத்தரு ளளிக்கமகிழ் பூத்தேன்.

12. இம்மகிழ்வ ளித்தெனையீ டேற்றுசரு வேசன்
செம்மலொரு நட்பிடை திரிக்கமுயல் கிற்றி!
அம்ம! கெடு வாய்! முடிவ தாங்கொலிஃ துன்னால்?
மும்மையுல குக்கெனினு மொய்ம்பிலது! காண்டி!

13. மற்றினி யுரைப்பதெவன்? வந்தவழி யின்னே
பற்றுதி! அனுத்துணை பயன்படுத லில்லாச்
செற்றமொ டெதிர்ந்தமர் செயத்துணிதி யாயின்
வெற்றிபெறு வாயலை! விரைந்திடுதி'' என்றான்.

## 3. அரிச்சந்திர புராணம்

### சூழ்வினைக் காண்டம்

[இதனைப் பாடியவர் நல்லூர் வீரகவிராயர்; 16-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். இந்நூல் பத்துக் காண்டங்களை உடையது; ஏறத்தாழ 1200 செய்யுட்களைக் கொண்டது. இந்நூற் பாக்கள் எளிய செந்தமிழ் நடையில் இயன்றவை.

இங்குப் பாடமாகத் தந்துள்ள செய்யுட்கள் சூழ்வினைக் காண்டத்தைச் சேர்ந்தவை. அரிச்சந்திரனைப் பொய் பேசுமாறு கோசிக முனிவன் சூழ்ச்சி புரிதலைக் கூறும் பகுதி இது. அரசன் காட்டில் வேட்டையாடி மிகவும் களைத்துத் தன் பரிவாரங்களுடன் ஒரு குளத்தருகே இருந்த சோலையில் தங்கினான். அதனை அறிந்த கோசிக முனிவன் தன் தவத்தின் திறத்தாற் படைத்த எழில் மிகுந்த மோகினி மாதர் இருவரை அரசனிடம் அனுப்பி மன்னனை மயக்கத் துணிந்தான்.]

#### முனிவன் மாதரிடம் கூறுதல்

1. புண்ணியம் திரண்ட யாக்கைப்
புரவலன் வந்தான் என்று
எண்ணிய எண்ண மெல்லாம்
முடியுமென் றேம்பல் எய்தாப்
பண்ணியல் மதுரச் செஞ்சொல்
பவளவாய் கரிய செவ்வேற்
கண்ணியர் தம்மை நோக்கிக்
கௌசிகன் விளம்பலுற்றான்:

2. "பெடைநடை மடவீர், வாவிப்
பெருங்கரை தன்னில் வந்த
படையுடை வேந்தன் பார்போய்ப்
பாடலால் உருக்கி வெற்றிக்
குடையினைக் கொண்மின் அல்லாற்
கடிமணம் கொண்மின்'' என்ன
விடைகொடுத் திடலு மாதர்
விரைவினில் தொழுது போனார்.

### மாதர் அரசனை அடைதல்

3. எடுத்தநன் மகர யாழும்
ஏந்திய குழலும் தோன்ற
உடுத்தமே கலையும் செம்பொற்
சிலம்புநின் றோசை காட்டத்
தொடுத்தபூங் கோதை சோரத்
தோன்றலைக் காணவேண்டி
அடுத்தபூஞ் சோலை நீங்கி
அகன்புனற் பொய்கை புக்கார்.

[குளத்தருகே சென்ற மாதர், அங்குத் தன் மனைவியுடனும் பரிவாரங்களுடனும் இருந்த அரிச்சந்திரனைக் கண்டனர்; அவன் சிறப்பையும் அழகையும் ஏத்தினர்; தம் இடமும் சிறப்பும் கூறி, பண்ணுடன் யாழ் பாடலாயினர்.]

### மாதர் பாடுதல்

4. மகரயாழ் வாங்கி நீங்கு
மாடக முறுக்கிச் செம்பொன்
சிகரமாம் மார்பிற் சேர்த்திச்
செவியுற விசையெ ழீஇத்தந்
நிகரிலா அமுதப் பாடற் பாணியின்
நிறுவிப் பின்னர்ப் பகர்தரும்
இசைகள் ஏழும் வகைவகை
பாடி னரே.

5. காவியங் கண்ணும் மூடா;
கவரிதழ் தானும் கோடா;
வாவியங் கமல மன்ன
வதனமும் நுதலும் ஏரு;
தூவியந் தோகை நல்லார்
சுவரின்மேல் எழுதி வைத்த
ஓவியம் பாடிற் றென்னப்
பாடினர் உருக யாரும்.

6. கரும்பினைக் கடிந்த தீஞ்சொல்
காரினைக் கடிந்த கூந்தல்
பருமணி மாலை மாதர்
பவளவாய்ப் பிறக்கும் கானம்
வரும்பனி மதியை நோக்கிக்
கிண்கிணி வாய்கொண் டார்ப்பின்
அரும்பவி ழாமற் போதுள்
வண்டிருந் தார்ப்ப தென்ன.

### இசை கேட்ட மக்களது பாராட்டு

7. அட்டமா அனைத்தும் புள்ளும்
ஆவிபெற் றேகும் என்பார்;
சுட்டநீள் வனங்கள் எல்லாம்
சோலையாத் தழைக்கும் என்பார்;
பட்டவாள் வீரர் எல்லாம்
உய்வகை பலிப்ப தென்பார்;
வட்டமா மதிய மன்ன
வதனத்தார் பாடல் கேட்டே.

### விலங்குகளும் பறவைகளும் வெளிப்படல்

8. நாடெலாம் அழிக்கக் கேட்டு
நரபதி வெகுண்ட வேட்டை
ஆடலால் வெருண்டு போய்த்தம்
ஆருயிர் ஓம்பித் துன்றும்
காடெலாம் கரந்த மாக்கள்
கன்னியர் மதுர கீதப்
பாடலால் வெளிப்பட் டுற்ற
பறவையும் பறந்த அம்மா.

### அரசனும் அரசியும் மகிழ்தல்

9. நல்லியல் மகர யாழின்
நாதமும் மிடறும் ஒன்றப்
புல்லிய கீத வோசை
செவிவழிப் புகுத லோடும்
வல்லியர் தம்மை நோக்கி
மலர்த்திருக் கரம மைத்து
மெல்லியல் தானும் வெற்றி
வேந்தனும் மிகம கிழ்ந்தார்.

### மன்னன் பரிசு நல்க, மாதர் மறுத்து மொழிதல்

10. மணியொடு கடகம் செம்பொன்
வளையெரி மணிப்பொன் னாரம்
அணிதுகில் பிறவும் நீட்டிக்
கொண்மென அளித்த லோடும்
"பணிகளும் துகிலும் பொன்னும்
பெற்றயாம் படர்ந்தேம் அல்லேம்;
திணிசுடர் முடியாய், யாங்கள்
தேடிய பரிசில் கேளாய்."

[என்று கூறி அவனது கொற்றக் குடையைப் பரிசிலாகக் கேட்டனர்.]

### அரசன் மறுத்து மொழிதல்

11. "பழிவழி யொழுகா நீதிப்
பானுவின் குலத்து வேந்தர்
வழிவழி வந்த கொற்றக்
கவிகையை வழங்க மாட்டேன்;
வழிவழி கண்ட வேறு
கவிகையை விளம்பில் உங்கள்
மொழிவழி தருவேன்" என்று
மொழிந்தனன் மன்னர் கோமான்.

[அவர்கள் தம்மை மணந்துகொள்ளுமாறு வேண்டினர். அரசன் சினந்து அவர்களை அகற்றுமாறு ஆணையிட்டான். வீரர்கள் அம்மாதரை நெருங்க, அவ்வளவில் அவர்கள் அலறி நடுங்கி,]

### மாதர் கோசிகன்முன் வந்து வீழ்தல்

12. ஆறுகொண் டோடார் செல்லா
அடவியிற் சென்று மேனி
மாறுகொண் டுதிரம் சிந்த
மஞ்சினைப் பழித்த கூந்தல்
தூறுகொண் டீர்க்கச் சேர்த்த
துகில்கிழிந் தகலச் சாப
வீறுகொண் டேவி விட்ட
முனிவன்முன் வீழ்ந்தார் வந்து.

## குறிப்புரை

1. 1. அலமர - சுழல; இணை - இரண்டு; கண்டி யாவரும் - 'டி' என்பது குற்றியலிகரம். மொண்டு - முகந்து; நரைதிரை - உம்மைத்தொகை. கொற்றவன் - கன்னன்; வாயில் - இலக்கணப்போலி.
2. அருத்தி - அன்பு; சுர[ர்]தரு - கற்பகத்தரு. விருத்த வேதியன் - கிழப் பார்ப்பான். கறுத்தவர் - கோபங்கொண்டவர்; நிருபர் - அரசர். உறுவன்-தன்மை ஒருமை வினைமுற்று.
3. கவசகுண்டலம் - உம்மைத்தொகை; பெறுக - வியங்கோள் வினைமுற்று: அசரீரி - மாயக்குரல்; விரகு - தந்திரம்; வழங்கல் - வழங்காதே: தினகரன் - சூரியன்.
4. இந்து - சந்திரன்; உற்று இரங்கி, பொங்கி ஒலித்து; ஏறும் சிந்து- ஏறிச் சிதறுகின்ற; திரை - அலை; சிந்து - கடல்; உருகும்-மகிழும்; தெரிவை - குந்தி.
அன்னை-அண்மை விளி; ஈன்ற-இறந்தகாலப் பெயரெச்சம்; பேழை- பெட்டி.

6. மதித்து - நினைத்து; பயந்தவன் - பெற்றவன்; தூயநாகர் - சிறந்த தேவர்; துகில் - ஆடை.

7. அங்கர்கோன் - கன்னன்; (மொழி)பகர் தையல் - வினைத்தொகை; மையலின் தவிர்ந்து - மயக்கம் நீங்கி. படாம் - ஆடை; எடா - எடுத்து.

8. மதலாய் - விளி; மலரடி - உவமத்தொகை; ஓச்சி - நடத்தி; அரசு எலாம் - ஒருமைப் பன்மை மயக்கம்; குரிசில்- தலைவன்.

9. மகவு - குழந்தை; அருமை + உயிர் = ஆருயிர்; தம்பியர் - பலர்பாற் பெயர்.

10. மடந்தை - பானுமதி; உக - சிந்த; ஏகாந்தம்-தனி; செருமுனை - போர்க்களம்; கருமம் - செயல் (கடமை).

2. 1. அ + இடை = ஆயிடை; தமியன்; - தனித்தவன்; துணுக்குற்று - திடுக்கிட்டு; உரும்-இடி; கதித்து-விரைவாக.

2. பேதுற்று - மதிமயங்கி; உள்ளுடைந்து - மனமுடைந்து; ஆரியன் - கிறித்தவன்; மாரி - மழை; அச்சுறுத்தல் - பயமுறுத்தல்.

3. காய் எரி - சுடும் நெருப்பு; பங்கி - தலைமயிர்; வக்கிரதந்தன் - (வக்கிரமான) ஒழுங்கில்லாத பற்களையுடையவன்; வன்கணன் - கொடுமையானவன்; உயிர்க்கும் - பெருமூச்சுவிடும்.

4. படுபாதகன் - கொடியவன்; அழிம்பன் - காரணப் பெயர்; உள் அழிந்து - ஊக்கங்குன்றி; உய்வு - பிழைப்பு.

5. உங்கரித்து - ஆரவாரஞ்செய்து; எங்கு உளை - நீ எங்கு உள்ளவன்; நுவறி - சொல்; கங்குல் - இரவு.

6. மெய் வார்த்தை - உண்மை உரை; வரைந்து - விலக்கி.

7. வீவினை விரும்பிடாது - இறக்க விரும்பாமல்; விண்புலம் - வானுலகு; தொழும்பு - தொண்டு; சும்மை - சுமை; தெறித்து - சிதறி.

8. நித்திய சுகம் - நாளும் இன்பம்; சுகம் + ஆனந்தம் = சுகானந்தம் - (தீர்க்கசந்தி); முடுகுகின்றவன் - விரைந்து செல்லுபவன்.

9. பொற்பு - அழகு; போந்து - வந்து; காமியம் - வினைப்பயன்; பேது உறேல் - மன மயங்காதே.

10. இகசுகம் - இவ்வுலக இன்பம்; பிணங்குவாய் எனில்-மாறுபட்டால்; உணங்கியோய் - வருந்தியவனே; நிணம் - ஊன்; குருதி -இரத்தம்.

11. எண்ணரிய - கணக்கிலடங்காத; மகிழ்பூத்தேன் - மகிழ்ந்தேன்.

12. ஈடேற்று-கடைத்தேற்று; சர்வ(ம்) ஈசன்-முழுமுதல்வன்; திரிக்க - வேறுபடுத்த; முயல்கிற்றி - முயல்கிறாய்; மொய்ம்பு - வலிமை; காண்டி - காண்பாய். (முன்னிலை ஒருமை வினைமுற்று)

13. அணுத்துணை - அணுவளவு; இல்லாச் செற்றம் - ஈறு கெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்; செற்றம் - கோபம்; அமர் - போர்.

3. 1. புண்ணியம்...புரவலன் - அரிச்சந்திரன்; யாக்கை-கட்டுதல்; தொழிலாகுபெயர். ஏம்பல் - மகிழ்ச்சி; எய்தா - அடைந்து; செய்யா என்னும் வாய்பாட்டு வினையெச்சம். பண் இயல் - இராகத்தோடு பொருந்திய; செஞ்சொல் - செம்மையான சொற்கள்; செவ்வேல் - பண்புத்தொகை. விளம்பல் - சொல்லுதல்; பவளவாய் - பவளம் [போன்ற] வாய்; உவமத்தொகை.

2. மடவீர்-இளம் பெண்களே; என்ன - என்று; மாதர் - பெண்கள்.

3. மேகலை - அரையிற்கட்டும் அணிவிசேடம்; கோதை - கூந்தல்; தோன்றல்-அரசன்; தொழிலாகுபெயர். பொய்கை-பொய்கையின் பக்கம்; புக்கார்-புகுந்தார்; அகல் + புனல் = அகன்புனல்.

4. மாடகம்-யாழின் உறுப்பு; எழிஇ-எழுப்பி; சொல்லிசை அளபெடை. பாணி - இசை; பகர்தரும் - சொல்லத்தக்க; ஏழிசை - குரல், துத்தம், கைக்கிளை, இளி, உழை, விளரி, தாரம். ஏழு + இசை = ஏழிசை.

5. காவி - நீலோற்பல மலர். அம்-அழகிய; கோடா-வளையா; நுதல்-நெற்றி; தோகை நல்லார் - மயில்போன்ற மகளிர்; இப்பாடல் இல்பொருள் உவமையணி.

6. கடிந்த - வென்ற; கார்-கரியமேகம்; தீம் - இனிமை; கானம் - இசை; போது - பேரரும்பு.

7. அட்ட - (அரசன் வேட்டையாடிக்) கொன்ற; உய்வகை - பிழைக்கும் வகை; வதனம் - முகம்; என்பார் - எதிர்கால வினைமுற்று.

8. நரபதி - மனிதர்க்குத் தலைவர்; அரசன். வெருண்டு - மருண்டு; ஒப்பி - பாதுகாத்து; துன்றும் - பொருந்திய; கரந்த - ஒளிந்திருந்த; மாக்கள் - விலங்குகள்; மதுரம் - இனிமை.

9. நன்மை + இயல் = நல்லியல். மிடறு - வாய்பாட்டின் ஓசை; ஒன்றப்புல்லிய - சேரக் கலந்த. வல்லியர் - கொடிபோன்ற மகளிர்; மலர்க்கரம் - மலர் (போன்ற) கரம்; உவமத் தொகை. மெல்லியல் - மென்மைத் தன்மையள், சந்திரமதி.

10. எரி - ஒளிவீசும்; துகில் - ஆடை; அணி - அழகிய; கொண்ம் - கொள்ளுங்கள்; முன்னிலைப்பன்மை வினைமுற்று; பெற்று - பெற்றுப்போக; படர்ந்தேம்-வந்தோம்; அல்லேம் - தன்மைப்பன்மை வினைமுற்று; திணிசுடர் - வினைத்தொகை.

11. ஒழுகா - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம், பானு - சூரியன்; கொற்றக்கவிகை - வெற்றிக்குரிய குடை.

12. ஆறு - வழி; அடவி - காடு; மாறு - காயங்கள்; மஞ்சு - மேகம்; தூறு - புதர்; ஈர்க்க - இழுக்க; சாபவீறு - சபிக்கும் ஆற்றல்.

## வினாக்கள்

1. வில்லிபுத்தூரார், கிருஷ்ணப் பிள்ளை—குறிப்பு வரைக.
2. கிழ அந்தணன் வந்த தோற்றத்தை வருணித்திடுக.
3. மறையோன் கேட்ட வினவும் வள்ளல் கூறிச் செய்த செயலும் யாவை?
4. கன்னன் குந்தியை வரவேற்று உபசரித்த விதம் யாது?
5. வணங்கிக் கேட்ட கன்னனுக்குக் குந்தி கூறிய மாற்றம் என்ன?
6. 'நின்மொழி நெஞ்சுறத் தேறேன்'—இடங்காட்டி விளக்குக.
7. குந்தி கன்னன் கடமை எனக் குறித்தவை யாவை?
8. துரியோதனன் தன்பால் கொண்டிருந்த அன்பையும் நம்பிக்கையையும் கன்னன் எவ்வாறு வெளிப்படுத்தினன்?
9. பேரொலி கேட்ட கிறித்தவன் நிலையையும், அதன் பின் அவன் செய்ததையும் கூறுக.
10. அழிம்பனின் தோற்றம் எத்தகையது?
11. அழிம்பன் கிறித்துவனைக் கேட்ட வினவும், அவன் கூறிய மாற்றமும் எழுது.
12. கிறித்தவனுக்கு அழிம்பன் கூறிய உரையும் அதற்கவன் சொன்ன பதிலையும் சுருக்கி வரைக.
13. கிறித்தவனுக்கும் அழிம்பனுக்கும் நடந்த உரையாடலைப் பதினறு வரிகளில் எழுதுக.
14. கோசிக முனிவன் மகளிரிடம் கூறியதென்ன?
15. மகளிர் எங்ஙனம் சென்று அரசனைக் கண்டனர்?
16. மகளிர் எவ்வாறு பாடினர்?
17. பாடலைக் கேட்ட மக்கள் கூறியவை யாவை?
18. பாடலைக் கேட்டுப் புட்களும் மாக்களும் செய்தவை யாவை?
19. அரசன் மகளிர்க்குக் கொடுத்த பரிசுகளை எழுதுக.
20. மகளிர் மன்னனிடம் வேண்டிய பரிசு யாது?
21. வேந்தன் கொற்றக்குடையைத் தர மறுத்து யாது கூறினன்?
22. தேவமகளிர் கோசிகனைச் சென்றடைந்த விதம் என்ன?

# IV. பல்சுவை

## 1. சிவன் பட்ட பாடு

வஞ்சகர்பால் நடந்தலைந்த காலிற்புண்ணும்
வாசல்தொறும் முட்டுண்ட தலையிற் புண்ணும்
செஞ்சொல்லை நினைந்துருகு நெஞ்சிற் புண்ணும்
தீருமென்றே சங்கரன்பாற் சேர்ந்தேன் அப்பா
கொஞ்சமல்ல பிரம்படியின் புண்ணும் வேடன்
கொடுங்காலால் உதைத்தபுண்ணும் கோப மாகப்
பஞ்சவரி லொருவன்வில்லால் அடித்த புண்ணும்
பார்என்றே காட்டிநின்றான் பரமன்றானே.

—இராமசந்திர கவிராயர்

## 2. சிலேடை

நஞ்சிருக்குந் தோலுரிக்கும் நாதர்முடி மேலிருக்கும்
வெஞ்சினத்திற் பற்பட்டால் மீளாது—விஞ்சுமலர்த்
தேம்பாயுஞ் சோலைத் திருமலைரா யன்வரையில்
பாம்பாகும் வாழைப் பழம்.

—காளமேகப் புலவர்

## 3. கையறம்

பூமா திருந்தென் புவிமா திருந்தெனிப் பூதலத்தில்
நாமா திருந்தென்ன நாமிருந் தென்னநன் னாவலர்க்குக்
கோமா னழகமர் மால்சீதக் காதி கொடைமிகுந்த
சீமா னிறந்திட்ட போதே புலமையுஞ் செத்ததுவே.

—படிக்காசுப் புலவர்

## 4. நாரை விடு தூது

[தூது என்பது பிரபந்த வகைகளில் ஒன்று. தூதனுப்பும் பொருள்களில் நாரையும் ஒன்று. நாரையைத் தூதுவிட்ட பாடல் ஆதலின் நாரை விடு தூது எனப் பெயர்பெற்றது. இதனை பாடியவர் சோழநாட்டுச் சத்திமுற்றத்து வாழ்ந்த புலவராவார்.]

நாராய்! நாராய்! செங்கால் நாராய்!
பழம்படு பனையின் கிழங்கு பிளந்தன்ன
பவளக் கூர்வாய்ச் செங்கால் நாராய்!
நீயும் நின் பெடையும்
தென்திசைக் குமரி ஆடி வடதிசைக்

காவிரி ஆட ஏகுவீர் ஆயின்
சத்தி முற்றத்து வாவியிற் றங்கி
நனைசுவர்க் கூரை கனைகுரல் பல்லி
பாடுபார்த் திருக்குமெம் மனைவியைக் கண்டெம்
கோமான் வழுதி கூடல் மன்றத்து
ஆடை யின்றி வாடையின் மெலிந்து
கையது கொண்டு மெய்யது பொத்திக்
காலது கொண்டு மேலது தழீஇப்
பேழையுள் இருக்கும் பாம்பென உயிர்க்கும்
ஏழையாளனைக் கண்டனம் எனுமே.

—சத்திமுற்றப்புலவர்

## 5. குறவஞ்சி

[பிரபந்த வகையைச் சேர்ந்ததே குறம் என்பதுவும். அக்குறம் பிற்காலத்தில் நாடக வடிவில் பாடல் உருக்கொண்டு குறவஞ்சியாயிற்று. இங்குள்ள பாடல் குற்றாலக் குறவஞ்சியில் உள்ளது. இதனைச் செய்தவர் திரிகூடராசப்பக் கவிராயர். இவர் காலம் கி. பி. 18-ஆம் நூற்றாண்டு.]

### குறத்தி மலைவளங்கூறுதல்

முழங்குதிரைப் புனலருவி கழங்கெனமுத் தாடும்
முற்றமெங்கும் பரந்துபெண்கள் சிற்றிலைக் கொண்டோடும்
கிழங்குகிள்ளித் தேனெடுத்து வளம்பாடி நடிப்போம்
கிம்புரியின் கொம்பொடித்து வெம்புதினை யிடிப்போம்
செழுங்குரங்கு தேமாவின் பழங்களைப்பந் தடிக்கும்
தேனலர்சண் பகவாசம் வானுலகில் வெடிக்கும்
வழங்குகொடை மகராசர் குறும்பலவி னீசர்
வளம்பெருகுந் திரிகூட மலையெங்கள் மலையே.

—திரிகூடராசப்ப கவிராயர்

## 6. ஐந்திணை ஐம்பது

### முல்லை

[ஒவ்வொரு திணையைப்பற்றியும் 10 பாக்கள் வீதம் ஐந்து திணையைப் பற்றியும் 50 பாக்களைக்கொண்ட நூல் ஐந்திணை ஐம்பது. இங்கு ஒவ்வொரு திணையிலிருந்தும் ஒவ்வொரு பாடல் எடுக்கப்பெற்றுள்ளது. இந்நூல் செய்தவர் மாறன் பொறையன் என்பவர். இந்நூற்குப் பழைய உரை ஒன்றும் உள்ளது.]

(கார் காலங் கண்டு வருந்திய தலைவிக்குத் தோழி கூறியது)

முல்லை நறுமல ரூதி இருந்தும்பி
செல்சார் வுடையார்க் கினியவாய்—நல்லாய்,மற்
றியாருமின் னெஞ்சினே மாகி வுறைவேமை
ஈரும் இருண்மாலை வந்து.

## 7. குறிஞ்சி

(காணது வருந்திய தலைவனுக்குத் தோழி கூறிய அறிவுரை)

மால்வரை வெற்ப! வணங்கு குரலேனல்
காவ வியற்கை யொருந்தேம்யாந்—தூவருவி
பூக்கண் கழூஉம் புறவிற்றாய்ப் பொன்விளையும்
பாக்கம் இதுவெம் மிடம்.

## 8. மருதம்

(தூது வந்த பாணனிடம் தலைவி கூறியது)

போதார்வண் டூதும் புனல்வய லூரற்குத்
தூதாய்த் திரிதரும் பாண்மகனே—நீதான்
அறிவயர்ந்து எம்மில்லுள் என்செய்ய வந்தாய்
நெறியதுகாண் எங்கையர் இற்கு.

## 9. பாலை

(நற்றாய் மனங்கலங்கிக் கூறியது)

பாவையும் பந்தும் பவளவாய்ப் பைங்கிளியும்
ஆயமும் ஒன்று மிவைநினையாள்—பால்போலு
மாய்ந்த மொழியினள் செல்லுங்கால் காதலன்பின்
காய்ந்து கதிர்தெறூஉங் காடு.

## 10. நெய்தல்

(தலைமகளை மணஞ்செய்துகொள்ளுமாறு தலைவனிடம் தோழி கூறியது)

எக்கர் இடுமணன்மே லோதந் தரவந்த
நித்தில நின்றிமைக்கு நீள்கழித் தண்சேர்ப்ப!
மிக்க மிகுபுகழ் தாங்குபவோ தற்சேர்ந்தார்
ஒற்கங் கடைப்பிடியா தார்,

—மாறன் பொறையனார்

## 11. புறநானூறு

[புறம் + நான்கு + நூறு = புறநானூறு. புறப்பொருளைப்பற்றிய நானூறு பாக்களையுடைய ஒரு தொகை நூல். எட்டுத்தொகை என்னும் நூல் வகையைச் சேர்ந்தது. இந்நூலிலுள்ள பாக்களைப் பாடிய புலவர்கள் பலர்; பாடப் பட்டோரும் பலர்.

மன்னரது வீரம், வள்ளலது கொடை, மக்களது நாகரிக வாழ்க்கை, புலவர்தம் செஞ்சொல் ஆற்றல் முதலியவற்றைப் புறத்திலே காணலாம். பொன்முடியார் என்னும் பெண்பாற் புலவர் கூறும் கடமைகளைக் கீழே காண்க.]

ஈன்றுபுறந் தருதல் என்றலைக் கடனே
சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே
வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே
நன்னடை நல்கல் வேந்தர்க்குக் கடனே
ஒளிறுவா ளருஞ்சம முருக்கிக்
களிறெறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே.

—பொன்முடியார்

## 12. சுதந்திரச் சிறப்பு

[இருபதாம் நூற்றுண்டில் தமிழ்நாட்டின் தனிப் பெருந் தலைவராய், புலவராய், நாவலராய், நூலாசிரியராய், பத்திரிகை ஆசிரியராய் விளங்கியவர் நம் திரு. வி. க. தமிழ்நாட்டில் தேசிய எழுச்சியை ஊட்டியவர்களில் திரு. வி. க.வும் ஒருவர். எழுதிய நூல்களும், வரைந்த கட்டுரைகளும், பேசிய மேடைகளும் பல.]

மீன்கடலே எழுந்தாலும் விண்சுடரே வீழுந்தாலும்
மான்மலைகள் சாய்ந்தாலும் மண்கம்ப மானாலும்
ஊன்கொந்தின் கண்டதுண்டம் ஒன்னலர்கள் செய்தாலும்
வான்மருவ நேர்ந்தாலும் மறப்பதன்று சுதந்திரமே.

—திரு. வி. க.

# குறிப்புரை

1. சங்கரன் - சிவன்; பிரம்படியின் புண் - வந்தியின் பொருட்டுப் பாண்டியன் பிரம்பால் அடிபட்ட புண்; வேடன் காலால் உதைத்த புண் - கண்ணப்ப நாயனார் செருப்புடைய காலை ஊன்றியதால் ஏற்பட்ட புண்; பஞ்சவர் - பாண்டியர்; வில்லால் அடித்த புண் - அருச்சுனன் தவம் புரிந்தபோது குறுக்கிட்ட சிவனை அடித்த புண்; பரமன் - சிவபிரான்.

2. நஞ்சிருக்கும் - விடங்கொண்டிருக்கும், நைந்து காணப்படும்; தோல் உரிக்கும் - மேல் தோலை உரிக்கும், மேற்றோலை உரிப்பர்; நாதர்முடி மேலிருக்கும் - சிவன் தலையில் ஆபரணமாக விருக்கும், பஞ்சாமிர்த மாக விருக்கும்; பற்பட்டால் மீளாது - பல் பட்டால் உயிர் திரும்ப வராது; வாயிற் சென்றால் திரும்பக் கிடைக்காது. சிலேடையணி.

3. பூமாது - திருமகள்; புவிமாது - நிலமகள்; நாமாது - கலைமகள், மால் - பெருமை; சீதக்காதி - சீதக்காதி என்னும் கொடைவள்ளல்; சீமான் - செல்வவான்.

4. நாராய் - விளிப்பெயர்; அன்ன - உவம உருபு. பெடை - பெண் நாரை. தெற்கு + திசை = தென்றிசை; குமரி - குமரித்துறை; சத்தி முற்றம் - சோழ நாட்டுச் சிவத்தலங்களுள் ஒன்று; வழுதி - பாண்டியன்; வாடை - வடதிசைக் காற்று; (தழுவி) தழிஇ - சொல்லிசையளபெடை; பேழை - பெட்டி; எனும் - என்று சொல்லுங்கள்.

5. சிறுமை + இல் = சிற்றில் - சிறிய வீடு; கிள்ளி - தோண்டி; கிம்புரி - யானை; தினை - குறிஞ்சி நில உணவுப் பொருள்களில் ஒன்று; தேமா - மா; சண்பகம் - சண்பக மலர்; குறுமை + பலா = குறும்பலா.

6. ஊதி - ரீங்காரஞ்செய்து; இரும் தும்பி - பெரிய வண்டுகள்; செல்சார்வு - செல்வாக்குடைய தலைவர்; ஈரும் - வருத்தும்; வந்து - தோன்றி.

7. வரைவெற்ப - மலைநாட்டுத் தலைவனே; வணங்கு - வளைந்த; குரல் - க்திர்; ஏனல் - தினைப்புனம்; இயற்கை - இயல்பான வாழ்க்கை; பூக்கள் - பூவின் உள்ளிடம்; கழூஉம் - செய்யுளிசை அளபெடை; புறவு - காடு; பாக்கம் - ஊர்; ஒழிந்தேம் - காலவழுவமைதி.

8. பாண்மகன் - தலைவனது ஏவலனாகி யாழ்கொண்டு இசைபாடுபவன்; அறிவு அயர்ந்து - அறிவு கெட்டு; என் + தங்கை - எங்கை - வேறு பெண்; எங்கை - மருஉப் பெயர்; இல் + கு = இற்கு; நெறி - வழி.

9. ஆய்ந்த மொழியினள் - தெளிவாகப் பேசும் என் மகள்; காதலன் - கணவன்; தெறும் - சுடும்; காடு - காட்டு வழி; பாவை - பொம்மை; பவளவாய் - உவமத்தொகை; பசுமை + கிளி = பைங்கிளி; ஆயம் - தோழிகள் கூட்டம்.

10. எக்கர் - மேலேறுதல்; ஓதம் - அலை; நித்திலம் - முத்துக்கள்; நீள்கழி - நீண்ட உப்பங்கழி; சேர்ப்பன் - நெய்தல் நிலத் தலைவன்; ஒற்கம் - குறைவு; கடைப்பிடியாதார் - விலக்க முன்வராத மக்கள்.

11. ஈன்று - பெற்று; புறந்தருதல் - பாதுகாத்தல்; தலை - முதன்மை; நன்னடை - நல்ல நிலம், நல்ல ஒழுக்கம்; அருஞ்சமம்-பெரும் போரில்; எறிந்து - வீசி; களை - உவமையாகுபெயர்.

12. எழுந்தாலும் - பொங்கி எழுந்தாலும்; விண்சுடர் - விண்ணிலிருந்து ஒளி தரும் சூரிய சந்திரர்; மண்கம்பம் - நிலநடுக்கம்; ஒன்னலர் - பகைவர்; வான்மருவ - வீரசுவர்க்கமடைய,

## வினக்கள்

1. புலவர் பட்ட துயரத்தையும் சிவன் பட்ட துன்பங்களையும் எழுதுக.
2. காளமேகம் பாடிய பாடலின் சிலேடைப் பொருளை விளக்கி வரைக.
3. சீதக்காதி இறந்தபோது படிக்காசுப் புலவர் எங்ஙனம் வருந்திப் பாடினர்?
4. நாரையிடம் சத்திமுற்றப் புலவர் கூறி அனுப்பிய செய்தி என்ன?
5. திரிகூட மலையின் வளத்தை எழுதுக.
6. தூது, குறவஞ்சி இவைகளின் இலக்கணத்தை எழுதுக.
7. கார் காலத்தில் வருந்திய தலைவிக்குத் தோழி கூறிய ஆறுதல் மொழி யாது?
8. தினைப்புனத்தை விட்டு நீங்கியமைக்குத் தோழி கூறும் காரணம் என்ன?
9. தூது வந்த பாணனிடம் தலைவி கோபித்துக் கூறியதை எழுது.
10. தலைவி வீட்டில் எவற்றை விரும்பிக் கொள்வாள்?
11. நெய்தல் நிலத் தலைவன் எத்தகைய சிறப்பினையுடைவன்?
12. பொன்முடியார் கூறிய கடமைகள் யாவை?
13. சுதந்திரத்தின் சிறப்பைத் தமிழ் முனிவர் எங்ஙனம் சிறப்பித்துக் கூறுகின்றார்?

# 1. பழைய உரைநடை

குடத்துப்பால் உறையாமையும் குவியிமிலேற்றின் மடக் கண்ணீர் சோர்தலும் உறியில் வெண்ணெய் உருகாமையும் மறி முடங்கி யாடாமையும் மான்மணி நிலத்தற்று வீழ்தலும் வருவதோர் துன்பமுண்டென மகளை நோக்கி மனமயங்காதே மண்ணின் மாதர்க்கணியாகிய கண்ணகியுந் தான் காண ஆயர் பாடியில் எருமன்றத்து மாயவனுடன் தம்முன் ஆடிய வால சரிதை நாடகங்களில் வேல் நெடுங்கண் பிஞ்ஞையோடு ஆடிய குரவை யாடுதும் யாமென்றாள் கறவை கன்று துயர் நீங்குகவெனவே.

—இளங்கோவடிகள்

# இறையனர் அகப்பொருள் உரை

அக்காலத்துப் பாண்டியனுடு பன்னீரியாண்டு வற்கடம் சென்றது. செல்லப் பசி கடுகுதலும், அரசன் சிட்டரை யெல்லாம் கூவி, "வம்மின்; யான் உங்களைப் புரந்தரகில்லேன்; என் தேயம் பெரிதும் வருந்துகின்றது. நீயிர் போய் நுமக்கறிந்தவாறு புக்கு, நாடு நாடாயின ஞான்று என்னை உள்ளி வம்மின்." என்ருன். என அரசனை விடுத்து எல்லாரும் போயின பின்றைக் கணக்கின்றிப் பன்னீரியாண்டு கழிந்தது.

கழிந்த பின்னர், நாடு மலிய மழை பெய்தது. பெய்த பின்றை, அரசன், "இனி நாடு நாடாயிற்று; ஆகலின், நூல் வல்லாரைக் கொணர்க," என்ன எல்லாப் பக்கமும் ஆட் போக்க, எழுத்ததிகாரமும் சொல்லதிகாரமும் வல்லாரைத் தலைப்பட்டுக் கொணர்ந்து, "பொருளதிகாரம் வல்லாரை எங்குந் தலைப்பட்டிலேம்," என்று வந்தார்.

வர, அரசனும் புடைபடக் கவன்று, "என்னை! எழுத்தும் சொல்லும் ஆராய்வது பொருளதிகாரத்தின்பொருட்டன்றே? பொருளதிகாரம் பெறேமெனின், இவை பெற்றும் பெற்றிலேம்!" எனச் சொல்லாநிற்ப, மதுரை ஆலவாயில் அழனிறக் கடவுள் சிந்திப்பான்; "என்னை பாவம்! அரசர்க்குக் கவற்சி பெரிதாயிற்று, அது தானும் ஞானத்திடையது ஆகலான், யாம் அதனைத் தீர்க்கற்பாலம்," என்று, இவ்வறுபது சூத்திரத்தையுஞ் செய்து, மூன்று செப்பிதழகத்து எழுதிப் பீடத்தின் கீழ்இட்டான்.

—நக்கீரர்

# 2. மனு நீதி சோழர்

[சிதம்பரம் இராமலிங்க அடிகள்]

[மனுநீதி சோழர் தம் புதல்வன் வீதிவிடங்கன் தேரினைப் பசுவின் கன்றின்மீதேற்றி அதைக் கொன்ருன் எனக் கேட்டு வருந்துகின்ருர்.]

"புத்திரப்பேறு பெற்றுப் புனிதனுனேன்!' என்று பூரித்திருந்தேனே! 'நம் புத்திரன் இளவரசுப் பட்டத்திற்கு ஏற்றவனுனன்; இனிக் கல்யாணஞ் செய்விப்போம்!' என்று கனவு கண்டிருந்தேனே! 'நம் புத்திரன் நற்குணங்களையுடைய வனுயிருக்கிருன்; பெற்றெடுத்த நமது பேர் கொண்டு வருவான்,' என்று மனோராச்சியம் பண்ணி மகிழ்ந்திருந் தேனே! இளங்கன்று எதிர்வரவுங் கண் கெட்டுக் கருத் தழிந்தவன்போலத் தேரை நடத்தித் தீராப் பழி பூண்டானே! ஐயோ! இவன் என் செங்கோலைப் பிடிக்கத்தக்க செல்வப் பிள்ளையாகாமல், தென்னம்பிள்ளையானுனே! சிவதரிசனஞ் செய்யப்போகிறவன் தேரூர்ந்தே போகப்படாது; அவ்வாறு போயினும், நாற்புறத்திலும் நடப்போர்களை விலகும்படி ஆள் விலக்கிகளை விட்டு, முன்னே பரிக்காரர் வரவு குறித்துப் போகப் பின்னே மெல்லெனத் தேரை விடவேண்டும்; அப்படிச் செய்யாமல், 'பாலியப் பருவம் பயமறியாது' என்பதற்குச் சரியாகப் பரபரப்பாகத் தேரை நடத்திப் பசுக் கன்றைக் கொன்ருனே!

'ஐயோ! இவன் கல்வியறிவுள்ளவனுயிருந்தும் அறி விழந்து அரசன் பிள்ளையாகாமல், அணிற்பிள்ளையானுனே! 'கொடிய பாதகங்களிலெல்லாம் கொலைப் பாதகம் தலைமை' என்று வேதம் முதலாகிய கலைகளிலேதான் படித்தறிந்தான்; சான்ருேர் சொல்லவுங் கேட்டறிந்தான்; அப்படியறிந் திருந்தும், அப்பாதகஞ் சேரவொட்டாமல், தன்னைக் காத்துக் கொண்டு பட்டப் பிள்ளையாகாமல், பழிப்பிள்ளையானுனே !

'ஐயோ ! 'புதல்வனைப் பெற்ருல் புண்ணியம் பெறலாம்,' என்றெண்ணிய எனக்கு, 'மலடாயிருந்தாலும் வாழ்வுண்டு,' என்று நினைக்கும்படி நேரிட்டதே! நான் நெடுநாளாகத்

தியாகராஜப் பெருமானை வேண்டிக்கொண்டது இப்படிப் பட்ட பெரிய பழிக்காளாகிய பிள்ளையைப் பெறத்தானோ! பிள்ளை என்ன செய்யும்! பெருமான் என்ன செய்வான்! 'மாதா பிதாக்கள் செய்தது மக்களுக்கு' என்னும் பெரியோர் வார்த்தையின்படி, 'நான் செய்த தீவினையே என் புத்திரனுக்கு நேரிட்டது,' என்று நினைத்து, என்னை வெறுத்துக்கொள்ள வேண்டுமென்றாலும், இந்தப் பிறப்பில் என் புத்தியறிந்து ஒரு தீங்குஞ் செய்ததில்லையே!

'இந்தப் பிறப்பில்லாவிட்டாலும் முற்பிறப்பிலே நல்லோர் மனதை நடுங்கச் செய்தேனோ! வலிய வழக்கிட்டு மானங் கெடுத்தேனோ! தானங் கொடுப்போரைத் தடுத்து நின்றேனோ! கலந்த சினேகிதரைக் கலகஞ் செய்தேனோ! மனமொத்த நட்புக்கு வஞ்சகஞ் செய்தேனோ! குடி வரி உயர்த்திக் கொள்ளை கொண்டேனோ! ஏழைகள் வயிறு எரியச் செய்தேனோ! தருமம் பாராது தண்டஞ்செய்தேனோ! மண்ணோரம் பேசி வாழ்வழித்தேனோ! உயிர்க்கொலை செய்வோர்க்கு உபகாரஞ் செய்தேனோ! களவு செய்வோர்க்கு உளவு சொன்னேனோ! பொருளை இச்சித்துப் பொய் சொன்னேனோ! ஆசை காட்டி மோசஞ் செய்தேனோ! வரவு போக்கொழிய வழியடைத்தேனோ! வேலையிட்டுக் கூலி குறைத்தேனோ! பசித்தோர் முகத்தைப் பாராதிருந்தேனோ! இரப்போர்க்குப் பிச்சை இல்லை என்றேனோ! கோள் சொல்லிக் குடும்பங் கலைத்தேனோ! நட்டாற்றிற் கையை நழுவவிட்டேனோ! கலங்கி யொளித்தோரைக் காட்டிக் கொடுத்தேனோ! குருவை வணங்கக் கூசி நின்றேனோ! குருவின் காணிக்கை கொடுக்க மறந்தேனோ! கற்றவர்தம்மைக் கடுகடுத் தேனோ! பெரியோர் பாட்டிற் பிழை சொன்னேனோ! பக்ஷியைக் கூண்டில் பதைக்க அடைத்தேனோ! கன்றுக்குப் பாலூட்டாது கட்டிவைத்தேனோ! ஊன் சுவையுண்டு உடலை வளர்த்தேனோ! கல்லும் நெல்லும் கலந்து விற்றேனோ! அன்புடைய வர்க்குத் துன்பஞ் செய்தேனோ! குடிக்கின்ற நீருள்ள குளத்தைத் தூர்த்தேனோ! வெயிலுக் கொதுங்கும் விருக்ஷத்தைத் அழித்தேனோ! பகை கொண்டு அயலோர் பயிரை அழித்தேனோ!

பொது மண்டபத்தைப் போயிடித்தேனே! ஆலயக் கதவை அடைத்துவைத்தேனே! சிவனடியாரைச் சீறி வைதேனே! தவஞ்செய்வோரைத் தாழ்வு சொன்னேனே! சுத்த ஞானிகளைத் தூஷணஞ் செய்தேனே! தாய் தந்தையர் மொழியைத் தள்ளி நடந்தேனே! தெய்வத்தை இகழ்ந்து செருக்கடைந்தேனே! இன்னதென்றறியேன்!

'ஐயோ! இந்தப் பசுவின் சோர்ந்த முகத்திற் கண்ணீர் ததும்புகின்றதைக் கண்ட என் கண்களை, நுங்கு சூன்றெடுப்பது போலப் பிடிங்கியெறியேனே! 'இதன் கன்றை உன் புத்திரன் தேர்க்காலில் ஊர்ந்து கொன்முன்,' என்று சொல்லக் கேட்ட என் செவிகளைச் செம்பு நீருருக்கி விட்டுச் செவிடாக்கேனே! இந்தப் பசு ஆராய்ச்சி மணியினுல் தன் குறையை அறிவித்த நாழிகைதொட்டு இந்நாழிகை வரையிலும் அக்குறையைத் தீர்ப்பதற்கு வேண்டிய உறுதிமொழியைக் கூருதிருக்கிற என் நாவைச் சூடுள்ள நெருப்பாற் சுடுவேனே! இதற்குத் துன்ப முண்டாக்கினவன் இன்னுனென்று அறிந்தும், அவனை இன்னும் தண்டனை செய்யாது தாழ்த்திருக்கின்ற என் கைகளைக் கத்தியைக்கொண்டு துண்டித்துவிடேனே! இதன் கன்றைப் பிழைப்பிப்பதற்குத் தக்க நன்முயற்சியைத் தேடி, நாலு திக்கு களிலும் நடவாத என் காலைக் கோடரி கொண்டு குறுக்கே வெட்டேனே! இதன் மெலிவை அடிக்கடி கண்டும் வற்றியொடுங்காத மலபாண்டமாகிய என்னுடம்பை வாளாயுதங் கொண்டு மடித்துக்கொள்ளேனே! இதன் பரிதாபத்தையும் எனக்கு நேரிட்ட பழியையும் எண்ணியும் உருகியழியாத உள்ளத்தை வலிய விஷத்தை விட்டு மாய்த்துவிடேனே! நிலையிலா உயிர்க்கஞ்சி இவைகளில் ஒன்றுஞ் செய்யாது உயிர் வைத்திருக்கின்றேனே! என்ன செய்வேன்!

'பாவிக்குத் தீர்க்காயுள்,' என்பதற்குச் சரியாகப் பெரும் பாவியாகிய என்னுயிர், தனக்குத் தானேயும் போகின்ற தில்லையே! 'நல்ல பூஜா பலத்தினுல் தெய்வபக்தியுடன் செங்கோல் செலுத்திவருகின்முன் மனுச் சோழன்,' என்று மண்ணுலகத்தாரும் விண்ணுலகத்தாரும் புகழ்ந்த புகழெல்லாம்

பொய்யாய்ப் போய்விட்டனவே ! நான் அப்புகழை வேண்டினவ னல்லன்; ஆதலால் அது போகட்டும்; உயிரினும் ஒன்பது பங்கு அதிகமாகத் தேடிவைத்த புண்ணியமும் போகின்றதே ! ஆ ! நான் நீதி தவருது அரசு செய்கின்றேன் என்பதை நினைத்தால் எனக்கே ஏளனமாயிருக்கின்றதே !

'சேங்கன்றைத் தெருவிற் சிதைக்கவும் ஒருமித்திருந்த என் செங்கோலை அளவுகோல் என்பேனு, அஞ்சனக்கோ லென்பேனே! எழுதுகோலென்பேனே, ஏற்றக்கோலென்பேனே ! கத்தரிக்கோ லென்பேனே ! கன்னக்கோலென்பேனே! குருடன்கோல் என்பேனே ! கொடுங்கோல் என்பேனே ! துடைப்பக் கோல் என்பேனே ! துலாக்கோலென்பேனே ! மரக்கோலென்பேனே ! வைக்கோலென்பேனே ! அல்லது இன்று இறந்த பசுங்கன்ருகிய பிரேதத்தைச் சுடுகின்ற பிணக் கோலென்பேனே ! என்ன கோலென்றுதா னெண்ணுவேன் !

'இளங்கன்றைக் கொலை செய்யச் சம்மதித்திருந்த என் ஆக்கினு சக்கரத்தைக் கிரக சக்கரமென்பேனே ! அல்லது, இச் சேங்கன்றைச் சிதைத்த தேர்ச்சக்கரமென்பேனே ! என்ன சக்கரமென்றெண்ணுவேன் ! இந்தப் பசுவின் கன்றுக்கு அபாயம் நேரிடக் காத்திருந்த என் காவலைச் சிறு பெண் காக்கின்ற தினைக்காவலென்பேனே ! குருடன் காக்கின்ற கொல்லைக் காவலென்பேனே ! புல்லாற் செய்த புருடன் காக்கின்ற புன்செய்க் காவலென்பேனே ! வரும்படி யில்லான் காக்கின்ற வாயிற்காவலென்பேனே ! பயிரைக் காக்கவைத்த பண்ணைக் காவலென்பேனே ! வேலை வேண்டிக் காக்கின்ற வெறுங்காவ லென்பேனே ! அல்லது, இக்கன்றை அடக்கம் செய்யக் காத்திருக்கின்ற அரிச்சந்திரன் காவலென்பேனே ! என்ன காவலென்றுதா னெண்ணுவேன் ! என்ன செய்வேன் !

'ஐயோ ! இப்படிப்பட்ட பாவியாகிய என்னை மனு வென்று பேரிட்டழைப்பது காராட்டை வெள்ளாடென்றும், அமங்கள வாரத்தை மங்கள வாரமென்றும், நாகப்பாம்பை நல்ல பாம்பென்றும் வழங்குகின்ற வழக்கம்போன்றதல்லது உண்மையல்லவே ! இனி, இப்பசுங்கன்று உயிர்பெற்றெழுந்

திருப்பதற்கு உபாயம், என் புத்திரன் உயிரையேயன்றி, என்னுயிரையும், என் மனையாளுயிரையும், என்னர சாட்சியையும், எனக்கு உரியவாகிய மற்றெல்லாப் பொருள்களை யும் கொடுத்துவிட்டால் நேரிடுமென்று சொல்வாருண்டானுல், இதோ கொடுத்துவிடுகின்றேன்! அவ்வாறு சொல்வாரும் இல்லையே! இதற்கு நேரிட்ட துக்கமும், எனக்கிதனு லுண்டாகிய துயரமும் எப்படித் தீருமோ! இப்படி என்றறி யேனே! என்ன செய்வேன்!' என்று பலவிதமாகப் பரிதவித் திருந்தார்.

# 3. நாகப்பட்டினம்

(டாக்டர் மா. இராசமாணிக்கனர், M. A., L. T., M. O. L., Ph. D.)

## சோழநாடு :

"செவிலித்தாய் என்ன ஓம்பும் தீம்புனற் கன்னி" என்று புலவர்களால் ஏத்தெடுக்கப்பெற்ற காவிரியாறு தன் கிளை யாறுகளுடன் பாய்வதால் "சோழவளநாடு சோறுடைத்து" என்று பாராட்டப்பெற்றது. சோழநாடு என்பது தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி மாவட்டங்களையும், வடவெள்ளாறு வரை உள்ள தென் ஆர்க்காட்டுப் பகுதியையும் தன்னகத்தே பெற்றது. இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பிருந்தே சோழநாடு சோழர் என்ற மரபரசரால் ஆளப்பட்டுவந்தது. சங்க காலத்தில் புகழ்பெற்ற காவிரிப்பூம்பட்டினம் தலை நகரமாகவும் துறைமுகமாகவும் விளக்கமுற்றிருந்தது.

## தேவாரக் காலம்:

மாதவியின் மகளான மணிமேகலையின் காலத்தில் (கி. பி. இரண்டாம் நூற்றுண்டில்) காவிரிப்பூம்பட்டினத்தில் பெரும் பகுதி கடல் கொந்தளிப்பால் அழிந்தது என்பதை மணிமேகலை என்னும் காப்பியம் விளக்கமுறக் கூறுகின்றது. சங்க காலத் திற்குப் பிறகு தமிழகத்தின் பெரும் பகுதி பல்லவர் ஆட்சிக்கு உட்பட்டது. அக்காலத்தில் சோழநாட்டில் சிறந்த துறை முகமாக இருந்தது "நாகப்பட்டினம்" என்பது தேவாரப் பாடல்களால் தெரிகிறது.

" வங்க மலி கடல் நாகை " என்று கி. பி. ஏழாம் நூற் றுண்டில் வாழ்ந்த நாவுக்கரசர் குறித்துள்ளார். அதே நூற்றுண்டில் வாழ்ந்த சம்பந்தர், "மலைபோல் உயர்ந்த கப்பல்கள் தங்கும் நாகை" என்று குறிப்பிட்டுள்ளார். துறைமுகப் பட்டினமாக இருந்தமையால் நகரம் செழிப்புற்றிருந்தது. இதனை 9-ஆம் நூற்றுண்டினரான சுந்தரர் "செல்வக் கடல் நாகை" என்று குறிப்பதிலிருந்து உணரலாம். "காண்பினரிய மணி மாடம் நிறைந்த நெடுவீதி"களைக் கொண்டது என்று சுந்தரர் பாடியுள்ளார்.

அந்தக் காலத்தில் கல்வி வளம் நன்னிலையில் இருந்தது என்பதைத் திருநாவுக்கரசர் "கற்றூர் பயில் நாகை" என்பதிலிருந்து நன்கறியலாம். நாகையில் சிவபெருமான் திருக்கோவில் ஒன்று பல்லவர் காலத்தில் (கி. பி. 300—900) இருந்தது. அதன் பெயர் "காரோணம்" என்பது. அக் கோயில் மேற்சொன்ன சமய குரவர் காலங்களில் பக்திக்கு நிலைக்களமாக இருந்தது என்பதும், மிக்க செல்வ வளம் பெற்றிருந்தது என்பதும் திருமுறைப் பாடல்களால் தெரிகின்றன.

*"சுந்தரனே கந்தமுதலாடையாபரணம்*
*பண்டாரத் தேயெனக்குப் பணித்தருளல் வேண்டும்"*

என்பது சுந்தரர் நாகைக் காரோணத்திற் பாடிய பாடலின் ஒரு பகுதி. கோவிற் பண்டாரத்திலிருந்து வாசனைப் பொருள்கள் ஆடைகள் ஆபரணங்கள் ஆகியவற்றைத் தமக்குத் தந்தருள வேண்டும் என்று சுந்தரர் சிவபெருமானை வேண்டியுள்ளார்.

### பெரியபுராணச் சான்று:

கி. பி. 5 அல்லது 6-ஆம் நூற்றுண்டில் வாழ்ந்த காரைக்கால் அம்மையாரது காலத்திலேயே நாகை செல்வத்திற் சிறந்த நகரமாகவும், துறைமுகப்பட்டினமாகவும் இருந்தது என்பது பெரியபுராணத்தால் தெரிகிறது. காரைக்காலிற் பிறந்து வளர்ந்த அம்மையார் நாகையில் கடல் வாணிகத்திற் சிறந்த வணிகன் மகனை மணந்துகொண்டார். கி. பி. 8-ஆம் நூற்றுண்டினர் என்று மதிக்கத்தக்க அதிபத்த நாயனுர் காலத்தில் நாகை "கப்பல் செல்வம்" பெற்றிருந்தது என்று சேக்கிழார் கூறியுள்ளார்.

### வரலாற்றுச் சான்று:

கி. பி. 720-ல் நரசிம்ம பல்லவன் (இராஜசிம்ம பல்லவன்) சீனப் பேரரசை மதித்துப் பௌத்தர்கட்காக நாகையில் ஒரு கோவில் கட்டி, அதற்குப் பெயரிடுமாறு சீனப் பேரரசனை வேண்டினுன். சீனப் பேரரசன் அங்ஙனமே செய்து பல பரிசுகளும் அனுப்பினுன் என்பது சீனர் எழுதிவைத்திருந்த

TB
03K(9) N57



குறிப்புக்களிலிருந்து அறியலாம். சீனர்கள் பௌத்த சமயத்தினர்; கடல் வாணிகத்திற் சிறந்தவர். அவர்கள் நாகையில் தங்கிக் கடல் வாணிகம் செய்தவர். அவர்கள் வழிபாட்டிற்குப் புத்தர் கோவில் பல்லவனால் கட்டப்பட்டது. பல்லவ நாடு அக்காலத்திற் சீன நாட்டுடன் கடல் வாணிகம் செய்து வந்தது. சீனப் பேரரசனை மகிழ்விக்கவே பல்லவன் நாகையில் புத்தர் கோவிலைக் கட்டினான். இக்குறிப்புக்களாலும் நாகை சிறந்த கடற்துறைப்பட்டினமாக இருந்ததென்பதை நன்கறியலாம்.

கி. பி. 8-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த திருமங்கையாழ்வார் நாகைப் பௌத்த விகாரத்தில் இருந்த முழுவதும் பொன்னால் செய்யப்பட்டிருந்த புத்தர் உருவச் சிலையைக் கவர்ந்து சென்று; அப்பொன்னைக்கொண்டு திருவரங்கத்தில் திருமதில் எழுப்பித்தல் முதலிய திருத்தொண்டுகளைச் செய்தார் என்று வைணவ நூல்கள் கூறுகின்றன. இதிலிருந்து இராஜசிம்மன் கட்டிய பௌத்த விகாரத்தைப்பற்றி நன்கறியலாம் அன்றோ?

86762

**பிற்காலச் சோழர் காலத்தில்:**

கி. பி. 985 முதல் 1014 வரை அரசாண்ட இராசராசன் காலத்தில் நாகையில் "ஸ்ரீசைலேந்திர சூடாமணி விகாரை" என்னும் பௌத்தப் பள்ளி கட்டப்பட்டது. மலேயா, சுமத்திரா என்னும் பகுதிகளை ஆண்ட ஸ்ரீமாற விஜயோத்துங்க வர்மன் என்ற அரசனது வேண்டுகோட்படி அந்த விகாரை நாகையிற் கட்ட இராசராசன் இசைவு தந்தான். அந்த விகாரை ஸ்ரீமாற விஜயோத்துங்கன் தந்தையான சூடாமணி வர்மன் பெயரால் கட்டப்பட்டது. ஆதலின் "சூடாமணி விகாரை" எனப் பெயர்பெற்றது. இராசராசன் நாகையை அடுத்த ஆனைமங்கலம் முதலிய ஊர்களை அவ்விகாரைக்குப் பள்ளிச் சந்தமாக அளித்தான். ஆயினும் சாசனம் எழுதுவதற்கு முன் அவன் இறந்துவிட்டதால் அவன் செல்வ மைந்தனான இராசேந்திர சோழன் செப்புப் பட்டயத்தில் சாசனம் எழுதிக் கொடுத்தான்.

கி. பி. 12-ஆம் நூற்றுண்டில் வாழ்ந்த சேக்கிழார், "சோழநாடு என்னும் கற்பகப் பூங்கொடியின் 'மலர்' என்று சொல்லத்தக்க முறையில் பல நலங்களையும் பெற்று விளங்கியது நாகப்பட்டினம் என்னும் திருநகரம்" என்று பாடியுள்ளார். இதிலிருந்து அந்நகரம், சோழப்பெருநாட்டில் மிகச் சிறந்த நகரமாக இருந்தது என்பதை உணரலாம்.

**விஜயநகர அரசர் காலத்தில்:**

பர்மாவில் பெருநாட்டை ஆண்ட ராமபதி அரசன் இலங்கைக்கு ஒரு தூதனையும், பௌத்த பிக்ஷுக்கள் பதினொருவரையும் அனுப்பினன், அவர்கள் இலங்கையில் தங்கள் வேலையை முடித்துக்கொண்டு கப்பலேறிச் சென்றனர். வழியில் அக்கப்பல் புயலிற் சிக்கி உடைந்தது. அவர்கள் உயிர் பிழைத்துக் கரையேறி நாகையை அடைந்தார்கள். அங்கிருந்து "படரிகாராமம்" என்னும் பௌத்தப் பள்ளியில் தங்கி இருந்தார்கள். அப்பள்ளிக்கு அருகே சீனப் பேரரசனுல் குகை வடிவமாகக் கட்டப்பட்டிருந்த கோவிலில் புத்ததேவரை வணங்கினுர்கள். இந்த நிகழ்ச்சி கி. பி. 1477-ல் நடைபெற்றதாகப் பர்மாநாட்டு கல்யாணி நகரத்துக் கல்வெட்டுக் கூறுகிறது.

**நாகையிற் காளமேகம்:**

திருநாவுக்கரசராற் சிறப்பித்துக் கூறப்பட்ட நாகை மக்களின் கல்வி நிலை தொடர்ந்து உயரிய நிலையில் இருந்து வந்திருத்தல் வேண்டும் என்பது பின்வரும் செவிவழிச் செய்தியால் அறியப்படும். கி. பி. 15-ஆம் நூற்றுண்டில் வாழ்ந்த காளமேகப் புலவர் ஒருமுறை நாகை சென்றுர்; "சோறு விற்குமிடம் எது?" என்று தெருவில் பாக்குவைத்து விளையாடிக்கொண்டிருந்த சிறுவர்களைக் கேட்டார்; அதற்கு அவர்கள் நகைத்து, "சோறு தொண்டையில் விக்கும்", என்று குறும்பாகப் பதில் கூறினுர்கள். அதனுல் வெகுண்ட காளமேகம் அருகில் கிடந்த அடுப்புக்கரி ஒன்றை எடுத்து. எதிரிலிருந்த ஒரு வீட்டுச் சுவர்மீது,

> "பாக்குத் தெறித்துவிளை யாடுசிறுபா லகர்களுக்கு
> நாக்கு ............."

என்பதுவரை எழுதி, பசி கடுகியதால், உண்டுவந்து பிறகு

பிள்ளைகளைச் சபித்து எழுதவேண்டும் என்று, இரண்டாம் வரியை அப்படியே விட்டுவிட்டுச் சென்றார். அவர் செயலைக் கவனித்துக்கொண்டிருந்த பிள்ளைகள், அவர் சென்றபின், சுவர் அருகே சென்று, அவர் எழுதிவிட்டுச் சென்றதைப் பார்த்தனர். வாக்கியம் குறைவாக இருத்தலைப் பார்த்து ஒரு கரித்துண்டை எடுத்து,

*''நாக்குத்தமிழ் விளங்க நாகேசா.''*

என்று இரண்டாம் வரியை முடித்துவிட்டு, வழக்கம்போல் விளையாடிக்கொண்டிருந்தனர்,

*''நாக்குத் தெறித்துவிழ நாகேசா''*

என்று முடிக்கவேண்டும் எனத் திரும்பி வந்த காளமேகம் தாம் விட்டுச் சென்றது நிறைவாக்கப்பட்டிருப்பதைக் கண்டார். அது பிள்ளைகள் செயல் என்பதை அறிந்தார்; அவர்தம் தமிழறிவிற்கு வியந்தார். அப்பிள்ளைகளை அருகழைத்து ஆசீர்வதித்துச் சென்றார்,

**ஆங்கிலேயர் காலத்தில்:**

கி. பி. 1725-ஆம் ஆண்டில் ''சீனு கோவில்'' என்ற பெயருடன் ஒரு கோவில் நாகையில் இருந்ததென்று வாலெண்டின் என்பவர் குறித்துள்ளார். அதே கோவிலைத் தாம் 1846-ல் பார்த்ததாக சர் வால்டர் எலியட் எழுதியுள்ளார். டச்சுக்காரர், ஆங்கிலேயர்கள், பிரெஞ்சுக்காரர்கள் இந்தியாவில் வாணிகம் நடத்திய 18, 19-ஆம் நூற்றுண்டுகளிலும் நாகை கடல் வாணிகத்திற் சிறந்திருந்தது; கிறித்துவப் பாதிரிமார்கள் அங்கிருந்துகொண்டு தங்கள் சமயத்தையும், கல்வியையும் பரப்பிவந்தார்கள். இவை அனைத்தையும் நோக்க, கடல்நாகை, பல்லவர் காலமுதல் வெள்ளையர் காலம் வரை வாணிகத்திலும், கல்வியிலும் சிறந்திருந்தது என்பதை ஐயமற உணரலாம் அல்லவா?

**மகாவித்துவான் பிள்ளையவர்கள்:**

7-ஆம் நூற்றுண்டில் வாழ்ந்த அப்பரும் சம்பந்தரும், நாகையிற் கற்றவரும் சிவநெறிச் செல்வரும் தம் காலத்தில்

வாழ்ந்தனர் என்று குறிப்பிட்டுள்ளனர். நாகையில் கற்றவர் நீண்ட காலமாக இருந்துவந்தனர் என்பது முன்னரே குறிக்கப்பட்டது. சிவநெறிச் செல்வர்களும் அவ்வாறே இருந்திருத்தல்வேண்டும் என்று ஊகிப்பதில் தவறு இல்லை. கி. பி. 13-ஆம் நூற்றுண்டில் "தேவாரத் திருக்கூட்டம்" என்ற சிவபக்தர் சங்கம் நாகையில் இருந்தது. அதனைச் சேர்ந்த சீரியர் வேண்டுகோளின்படி மகாவித்துவான் மீனுட்சிசுந்தரம் பிள்ளையவர்கள், "திருநாகைக் காரோணப் புராணம்" என்னும் அரிய நூலை 1868-ல் பாடினுர்; ஓராண்டு முழுவதும் நாகையில் தங்கி, அவ்வரிய நூலைப் படித்து அரங்கேற்றம் செய்தார். அப்பெரியாருடைய அரங்கேற்ற வைபவத்தைப் பேராசிரியர் சுந்தரம் பிள்ளையவர்களின் சமய குருவாகிய "சுந்தர சுவாமிகளும்" நேரிற் கண்டு களித்தார். சிவநெறிச் செல்வர்கள் புராணத்தைப் பாராட்டிப் பிள்ளை அவர்கட்குப் பெருஞ் சிறப்புச் செய்தனர். இங்ஙனம் நாகை கல்வி, செல்வம், சமயம் என்னும் முத்துறைகளிலும் பல்லவர் காலம்முதல் மேம்பட்டுவந்தது.

# 4. தமிழன் உள்ளம்

(வித்துவான் சி. இராசகோபால பிள்ளை)

உள்ளம் என்பது உள்ளும் ஒரு தொழில். அத்தொழிலின் நிகழ்ச்சியே மக்களை உயர்ந்தோர், தாழ்ந்தோர் என மாறுபடச் செய்கின்றது. அந் நிகழ்ச்சி நிகழுமிடம் மன மாதலின் மனத்திற்கு உரிய பெயர்கள் எவ்வளவோ அவ்வளவும் அவ்வுள்ளத்தைக் குறிப்பனவாகும். இவ்வுள்ளம் உயர்ந்த கருத்துக்களை உன்னி உணருமேயானால் அவ்வுள்ளமுடையான் உயர்ந்த மனிதனாகின்றான். அன்றி இழிந்த, தாழ்ந்த, புன்மையான கருத்துக்களைக் கருதுமேல் அவ்வுள்ளமுடையான் இழிந்த, தாழ்ந்த, புன்மையான மனிதனாகின்றான், இது கருதியே வள்ளுவனாரும், "உள்ளுவதெல்லாம் உயர்வு உள்ளல்" என்றனர்.

இவ்விரு நிலையுமின்றி உயர்கருத்தையோ, இழிகருத்தையோ உய்த்துணரும் வலியின்றிச் செயலற்று ஒருவன் மனம் சோம்பி இருக்குமாயின், அவன் மனிதனாயினும் மரமே யாவான்; உருவில் மட்டும் மனிதனைப்போல் தோற்றமளிப்பான். "உரம் ஒருவற்கு உள்ள வெறுக்கை அஃது இல்லார் மரம் மக்கள் ஆதலே வேறு" (குறள் 610) என்றனர் பொய்யாமொழியும். இனித் தமிழன் உள்ளம் யாதென உணருவோம்.

இன்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழ் நூல்களைத் துருவி ஆய்ந்தோமானால் ஒவ்வோர் இடத்திலும் தமிழனது உள்ளம் அன்பு நிறைந்து, வீரம் செறிந்து, மானம் மிகுந்து, அறம் வளர்ந்து மக்கட் பண்புகள் முழுவதும் வாய்க்கப் பெற்றிருத்தலைப் பரக்கக் காணலாம். முதலாவதாக, தமிழன் உள்ளத்தில் அன்பு எவ்வாறு நிறைந்துளது என்பதைச் சிறிது நோக்குவோம்.

தமிழன் உள்ளம் அன்பே வடிவாய் விளங்கிற்று. மக்கள் வாழ்க்கைக்கே அன்புதான் ஆணி வேர் என்பதையும்

அவன் அறிந்திருந்தான். ஒருவன் தனது அன்பை அறித லாகாதென மறைத்து வைப்பினும் பிறர் உயிர்படும் இன்னலைக் கண்டு மனம் பொருதுருகி, பெருகியோடும் அவனது கண்ணீரே யாவரும் அறியப் புலப்படுத்திவிடும். அன்பானது தன்னையுடையவனை உடல், பொருள், ஆவி என்ற மூன்றினாலும் தனக்கென வாழாப் பிறர்க்குரியாளனாக ஆக்குவதுடன் உயிரும் உடலும் இயைந்து வாழ்வதற்கும் காரணமாயுள்ளதென்பதையும் தமிழன் உள்ளம் உணர்ந் துள்ளது, இதுவேயன்றி ஒருவன் அறம் ஆற்றுவதற்கும் மறம் புரிதற்கும் அன்புவேண்டற்பாலது என்பதையும் உணர்ந்திருந் தான் தமிழன்,

பாண்டிய மன்னருள் கல்வி கேள்விகளிற் சிறந்த பெரியாரான கடலுண் மாய்ந்த இளம்பெரு வழுதி, செங்கோலோச்சி உலகாளும் பணி பூண்டும், ஓய்வு நேரங் களில் சோர்வின்றிப் பல கலைகளைப் பயின்று புலவர்களுள் தாமொருவராய்ப் போட்டியிட்டுக் கவி பாடிப் புகழ் கைக் கொண்ட இகழ்விலாளர். இவர்பால் ஒரு நாள் ஓரையம் தோன்றியது. அவ்வையம் யாதோவெனின், இவ்வுலக நிலை பேற்றிற்குக் காரணம் யாதென்பதே, இது கருதிப் பல நாள் சிந்திக்க, ஒரு நாள் உண்மை இன்னதென உணர்ந்தார். அவ் வுண்மையை உணர்ந்தவாறே ஒரு பாடலில் அமைத்தார்.

அப்பாடல் வருமாறு:

*''உண்டா லம்மவிவ் வுலக மிந்திர*
*ரமிழ்த மியைவ தாயினு மினிதெனத்*
*தமிய ருண்டலு மிலரே முனிவிலர்*
*துஞ்சலு மிலர்பிற ரஞ்சுவ தஞ்சிப்*
*புகழெனி னுயிருங் கொடுக்குவர் பழியெனி*
*னுலகுடன் பெறினுங் கொள்ளல ரயர்வில*
*ரன்ன மாட்சி யனைய ராகித்*
*தமக்கென முயலா நோன்றாட்*
*பிறர்க்கென முயலுந ருண்மை யானே''* (புறம் 192)

என்பதாம். இப்பொருண்மொழிக்காஞ்சி எவ்வளவு சீரிய பொருளைத் தன்னுள்ளடக்கிச் சிறந்து மிளிர்கின்றது! உலகாளும் மன்னன் பாடிய பாடலிது. ஓய்வு நேரங்களிற்

கற்றுணர்ந்த கவிச் சித்திரமிது. என்ன அழகு! என்னே அன்பின் பெருக்கு! பாண்டியன் நெடுஞ்செழியனிடம் குடபுலவியனர் உலகம் நிலைபெறுதற்குக் காரணம் நிலமும் நீருமே என்கின்றனர்.

"நீரின் றமையா யாக்கைக் கெல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே
உண்டி முதற்றே உணவின் பிண்டம்
உணவெனப் படுவது நிலத்தொடுநீரே
நீரும் நிலனும் புணரியோர் ஈண்டு
உடம்பும் உயிரும் படைத்திசி னேரே" (புறம் 18)

என்பது அவர் வாக்கு.

புலவர்கள் கூற்று இங்ஙனமிருக்க, மன்னர் மரபிற்றேன்றி மன்னவரும் புலவருமாய் மிளர்ந்த மாண்புமிக்க நம் இளம் பெரு வழுதியினது எண்ணம் எங்குச் சென்று நிற்கின்றது. உலகம் நிலைபெறுதற்குக் காரணம் எது வென்கிறார்.

"தேவர்க்குரிய அமுது கிடைப்பினும் அதைக் கிடைத்தற் கரிய தெனக் கருதிப் பிறர்க்களிக்காமல் தாமே தனித்துண்ணாத வராகவும், யாரிடமும் வெறுப்பில்லாதவராகவும், பிறர் அஞ்சத்தக்க துன்பத்துக்குத் தாமும் அஞ்சி அத்துன்பத்தைப் போக்காமல் மடிந்திருக்கும் தன்மை இல்லாதவராகவும், புகழ் கிடைக்கின் உயிரையும் அளிப்பவராகவும், பழி வரு மாயின் உலக முழுவதும் தமக்குரிமையாகக் கிடைக்கினும் ஏற்றுக்கொள்ளாதவராகவும், எக்காலத்தும் மனதில் கவர்ச்சி இல்லாதவராகவும், தாம் முயலும் முயற்சி யாவும் தம் நலனுக்கே என்ற எண்ணமில்லாமல் பிறர் நலன் பெற வேண்டுமென்றே எண்ணி முயலும் இயல்பினராகவும் உள்ள மக்கள் வாழ்கின்ற காரணத்தினற்றன் இவ்வையம் நிலைத் திருக்கின்றது" என்று கூறுகின்றார்.

அன்பு மிகுந்து அறம் நிறைந்து வீரம் செறிந்து இகழ் வின்றிப் புகழ் மலிந்து கவர்ச்சியின்றித் தனக்கென வாழாப் பிறர்க்குரியாளராய் முயற்சியுற்று வாழும் மக்கள் வாழ் வாலேயே உலகம் வாழ்கின்றது என்ற உண்மையைத்

தெள்ளத் தெளிய உணர்ந்த பெரியாராதலின் நம் வழுதி தம் பாடலில் தாம் உணர்ந்த அருங் கருத்தைப் பலருமறியும் வண்ணம் விரித்துரைத்தனர். என்னே அரசரின் எண்ணம்! இத்தகைய மனப் பண்பமைந்த மன்னன் ஆட்சி எவ்விதம் இலங்கியிருக்கும்! இவர் ஆண்ட நாடு எத்தகைய நாடாயிருந் திருக்கும்! அந்நாட்டு மக்கள் எவ்வித மனப்பான்மையுடன் இருந்திருக்கவேண்டும் என்றாற்போன்ற கருத்துக்களைக் கருதுவோமாயின் நம் முன்னோர்கள் உள்ளம் எந்நிலை பெற்று விளங்கிற்று, அவர்களிடம் மக்கட் பண்பு எவ்வாறு குடிகொண்டிருந்தது, அவற்றால் உலகில் அவர்களடைந்த மேம்பாடு யாதாயிருக்கும்! இவைகளை எல்லாம் எண்ணிப் பார்க்கப் பார்க்க, அவர்கள் கால்வழி வந்த நமக்குத் தற்பொழுது உள்ள நிலையில் தமிழன், தமிழ்மொழி, தமிழ் நாடு என்றால் உலகமே, உலகில் உயர்ந்தோர் எனக் கருதும் தகுதி, வாய்ந்தவர்களே, காதில் போட்டுக்கொள்ளாத இந் நிலையில், தமிழ் மறையாம் திருக்குறளை அறநூலெனக் கருதி அதில் கூறும் நீதிகளை அரசினரும் அறங்கூறவையினரும் தமது நீதிமுறைகளில் ஏற்றுக்கொள்ளாத இந்நிலையில், உள்ளம் என்ன பாடுபடுகின்றது! எவ்விதம் உருகுகின்றது! இந்நிலை நீங்கி முன்னாள் நன்னிலையை நம் நாடு எய்துதல் ஒல்லுமோ; ஒல்லாதொழியுமோ என ஐயுறுகின்றது.

அன்பினாலே யாரையும் தம் வழிப்படுத்தி ஆண்ட அருங் குணப் பண்பினர் நம் தமிழர். இவர்கள் அன்புடைமை ஆன்ற குடிப்பிறப்பு இவ்விரண்டையும் மக்களினின்றும் பிரிக்க முடியாத உரிப்பொருளாம் பண்புடைமை எனக் கண்டனரேயல்லாது, அரம் போலுங் கூரிய கல்வியறிவையும் உடல் உறுப்புக்களின் தோற்றத்தையும் மக்கட் பண்பெனக் கொண்டனரில்லை. தமிழ் மன்னர்கள் தம் நாட்டு மக்களில் யாரேனும் தீங்கு புரியின் அவரைக் கண்டு அவர் செய்த தீங்கை யுணர்ந்து, அத்தீங்கு செய்தற்கு அவரை ஊக்கிய— அவரை விட்டு எவ்வகையிலும் விலகாமல் அவரிடம் அமைந் துள்ள இயல்பு யாதென வறிந்து அதனை அவரிடம் இல்லாத வாறு அகற்றிடுவர். அகற்றவே அத்தீங்கு செய்தோர்,

தாமும் தமது கால் வழியினரும் நண்பரும் பின் எக்காலத்தும் எவ்விதத் தீங்கையும் கனவிலும் நினையார்கள். இதுவே தீங்கு புரிந்தோர்க் காற்றும் சிறந்த தண்டனையாம். வள்ளுவப் பெருந்தகையும் "இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண நன்னயம் செய்துவிடல்" (குறள் 324) என நவின்றனரல்லவா? இஃதிவ்வாறாக இக்காலத்து மக்கள் தீங்கு புரிதலின் காரணத் துக்கும் அத்தீங்கு புரிந்தாரை அரசு ஒறுத்தலுக்கும் எவ்வளவு தொடர்புளது — சிந்தியுங்கள்! இவ்வொறுத்தலினால் எத்துணை பேர் தீமையொரீஇ நன்மக்களாயினர்—சொல்லவும் கூடுமோ? இந்நிலையில் நாடு நன்னிலை எய்துவதெங்ஙனம்?

பாண்டி நாட்டில் பூதப்பாண்டியன் என்றொரு மன்னவன் அரசுமுறை பிறழாது செங்கோல் ஓச்சினன். இவன் புலமை நிறைந்தவன்; வீரமும் அன்பும் ஒருங்கே அமையப்பெற்றவன். ஒருகால் ஒல்லையூர் என்னுமிடத்தில் எதிர்த்த பகைவரை வென்று அவ்வூரைத் தன்னடிப்படுத்தினான். அது முதல் அவன் "ஒல்லையூர் தந்த பூதப் பாண்டியன்" என்றே வழங்கலாயினன். அவனது இல்லாளும் கல்வியும் வனப்பும் வாய்க்கப்பெற்ற ஒப்பற்ற கற்புடைய நல்லாள். இவ்விருவரது பாடல்களும் புறநானூற்றில் உள்ளன.

இவனைப் பல அரசர்கள் ஒருசேர வந்து பொரவேண்டும் எனப் பேசிக்கொண்டனர். அப்பேச்சு இவன் காதில் பட்டது. உடனே சினம் மிகுந்தது. மிகுந்த சினம் வீணே அடங்கவில்லை. வஞ்சினமாயிற்று. புலமையோனாதலின் அவ் வஞ்சினச் சொற்கள் பாவாய் வெளிவந்தன. அப்பாவே

"மடங்கலிற் சினைஇ மடங்கா வுள்ளத்
தடங்காத் தானை வேந்த ருடங்கியைந்
தென்னொடு பொருது மென்ப வவரை
யாரம ரலறத் தாக்கித் தேரொ
டவர்புறங் காணே னாயிற் சிறந்த
பேரம ருண்க ணிவளினும் பிரிக
வறநிலை திரியா வன்பி லவையத்துத்
திறனில் ஒருவனை நாட்டி முறைதிரிந்து
மெலிகோல் செய்தே னாகுக மலிபுகழ்
வையை சூழ்ந்த வளங்கெழு வைப்பிற்

பொய்யா யாணர் மையற் கோமான்
மாவனு மன்னெயி லாந்தையு முறைசா
லந்துவஞ் சாத்தனு மாத னழிசியும்
வெஞ்சின வியக்கனு முளப்படப் பிறருங்
கண்போ னன்பிற் கேளிரோ டுகலந்த
வின்களி மகிழ்நகை யிழுக்கியா னென்றே
மன்பதை காக்கும் நீள்குடிச் சிறந்த
தென்புலங் காவலி னொரீஇப் பிறர்
வன்புலங் காவலின் மாறியான் பிறக்கே (புறம் 71)

என்பதாகும்.

வெகுளி, மகிழ்வு, துயரம் ஆதிய பண்புகள் தமது அளவினும் மிகின் அறிவு தொழில் புரியாது என்பது உளநூல் கருத்து. அக்கருத்தையும் மாற்றிற்று இவனது உள்ளம்; வெஞ்சின மிக்கு வஞ்சினங் கூறுங்காலும், அன்பிலும் அறனிலும் மேனிலையுற்றது. அவன் கூறும் வஞ்சினத்தைக் கவனியுங்கள்.

"வேந்தர் பலர் தம்முள் ஒப்பக் குழுமி வந்து என்னோடு பொருதும் என்ப; அவரைத் தாக்கிப் புறங்காணேனாயின், சிறந்த பேரமருண்கண் இவளினும் பிரிக" என்பது முதல் வஞ்சினம். இவன் மனைவிமாட்டு வைத்த காதலன்பு மிளிர் கின்றது. சினம் மிகுங்காலும் காதல் குறையாதது போற்றத் தக்கதன்றோ! ஆளுந் தலைவர் துன்பமோ, வெகுளியோ, வேறு எவ்விதக் குறையோ கூறுங்காலும் தம்மடி நிழல் வாழ்வார் மாட்டு வைத்த அன்பு நெகிழ்தலின்றி முகிழ்த்தலே சாலச் சிறந்தது. அதுவே தமிழன் உள்ளம். அவ்வுள்ளம் பாண்டியன்மாட்டு மிளிர்தலை உன்ன உன்ன உளம் பூரிக் கின்றது.

இரண்டாவதாக, "அறன்நிலை திரியா அன்பின் அவை யத்து திறன்இல் ஒருவனை நாட்டி முறை திரிந்து, மெலிகோல் செய்தேன் ஆகுக" என்கின்றனன். இவ் வஞ்சினம் நீதியின் நேர்மை இத்தன்மைத்தென இசைக்கின்றதல்லவா? அரசனுக்கு வென்றி தருவது வேலன்று; கோடாத செங்கோலேயாகும். அரசன் வையகம் முழுவதையும் முறை

செய்து காக்கின்றான். ஆனால் அவனைக் காப்பது அவனது நீதியேயாகும் என்று புகன்றனர் பொய்யில் புலவர். இத்தகைய நீதியில் நமது பாண்டியன் உள்ளம் எவ்வாறு படிந்து கிடந்தது பாருங்கள், அரசனைக் காப்பது நீதி. ஆதலின் அந் நீதியை நடாத்தும் நெறிமுறை யுணர்ந்த அறங்கூறவையினர் அறத்தின் திறனைக் காட்சி, கருத்து, நூல் என்ற மூன்றாலும் நன்குணர்ந்த மேதையராய் மிளிர்தல் வேண்டும். அதுகாலை தான் அறங்கூறவையில் நீதி நிலைக்கும். நீதி நிலைத்தால் தான் அரசன் அதன் பாதுகாவலில் வாழமுடியும். இஃதன்றித் திறனில் ஒருவனை நீதிமன்றில் நிறுவினால் அவன் அறமுறை யுணரும் அறிவாற்றலின்மையானும், தன்னலங் கருதி மனந் திரிதலானும் முறை திரிந்து நீதி வழுவுவன். வழுவவே, அரசன் கோல் மெலிந்து பாதுகாவலின்றிப் பாழுறுவது திண்ணம் என்ற உண்மை யுணர்ந்தே, "அறங்கூறவையத்துத் திறனில் ஒருவனை, நாட்டி முறை திரிந்து மெலிகோல் செய்தேனாகுக" என வஞ்சினங் கூறலாயினன்.

என்னே தமிழரசர் மனப்பண்பு! இவர்கள் ஆளும் நாட்டு மக்களின் நலமிகு வாழ்வை நவிலவும் வேண்டுமோ? இந்நாள் நீதிமன்றத்து அறங்கூறவையினர் புரியும் செயல்களை இதனோடு ஒப்பிட்டு உணரின் தற்கால மக்கள் மகிழ்வுறுதற்கும் அரசு நிலை பெறுதற்கும் ஏதேனும் வாய்ப்புளதோ? நீங்களே சிந்தியுங்கள்.

மூன்றாவதாக "மாவன், ஆந்தை, அந்துவஞ்சாத்தான், ஆதனழிசி, இயக்கன் ஆகிய இவருட்பட்ட என் கண் போன்ற நண்பினர்களுடன் மகிழும் மகிழ்ச்சியை யான் இழக்க" என்கின்றனன். இக்கூற்று, பூதப் பாண்டியனது உளம் நட்பின் கெழுதகைமையில் எவ்வாறு ஊன்றி நின்றது என்பதை உணர்த்துகின்றது. என்னே பூதப்பாண்டியனது நட்பின் காதல். பல்கலை பயின்றோனாதலின் "போற்றுதல் என்பது புணர்ந்தாரைப் பிரியாமை" (நெய்தற்கலி. 16) என்ற நல்லந்துவனார் வாக்கையும், "யாதும் கிழமையைக் கீழ்ந்திடா நட்பே பழைமை யெனப்படுவது; அப்பழைமையிற் றிரியாது நின்றாரது நட்பினை அந் நட்பினரால் பொருட்கேடு,

போர்க்கேடு முதலான தொலைவு வந்த விடத்தும் நட்பு வரம்பு இகவாது நின்றவர் துறவார்" என்ற செங்நாப்போதார் சீரிய கருத்தையும் நன்கு உணர்ந்துளன். எனவே போரில் தோற்பினும் நட்பினருடன் கலந்து மகிழும் மகிழ்நகையைத் தப்புதல் மிகக் கொடுமையான தென்பதை நன்குணர்ந்தே வஞ்சினங்கூறி விஞ்சினன்போலும். இது போன்ற வஞ்சினம் தமிழர்பால் என்றும் நிலவுக!

"கலந்தாரைக் கைவிடுதல் விலங்கிற்கும் விள்ளலரிது" என்றார் நாலடியாரும். ஏன்? ஆத்திசூடியில் அவ்வையாரும் "கூடிப் பிரியேல்" என்று கூறினரன்றோ! இவற்றை யெல்லாம் உன்னுங்கால் தமிழன் உள்ளம் அன்பிற்றிளைத்து அருளின் மூழ்கி அறம்புரிந்து உரங்கொண் டொளிர்தல் விளங்குகின்றதல்லவா? இக்கூற்றுக்களால் தமிழன் உளத்தில் அன்பு நிறைந்து ஒளிர்தலை ஒருவாறு உணரலாம். இம் முறையில் பண்டைத் தமிழ் நூற்களை எங்குத் துருவினும் அங்கங்கும் தமிழன் உள்ளம் எத்தகைய மறச்செயல் புரியுங் காலும் அன்பின் பெருக்கிலே படிந்து அறவழி நிற்றலை அறிந்து மகிழலாம்.

எனவே தமிழர் யாவரும் தொல்லோர் உளப்பாங்கினை ஆன்ற கல்வியறிவுடன் ஓர்ந்து அறம் பல புரிந்து நாற்றிசை மாந்தரும் புகழ நல்வாழ்வு நடாத்துவம் இனிதே.

# 5. சுட்ட பன்றி*

(பூ. ஆலாலசுந்தரஞ் செட்டியார், M. A.)

பல நூற்றுண்டுகட்கு முன்னர் மக்கள் விலங்குகளைக் கொன்று அவைகளின் பச்சை ஊனினைப் பதம் பண்ணத் தெரியாது புசித்துவந்தனர். தம் ஊன் பெருக்கற்குத் தாம் பிறிதூனுண்ணும் மக்கள் இறைச்சியினை அவித்தல், வறுத்தல் முதலிய இன்னோரன்ன முறைகளை உணர்ந்தாரில்லை. ஊனைச் சமைக்கும் வகையை மாந்தர் எவ்வாறு அறிந்துகொண்டனர் என்பதை அடியிற் கண்ட கதையால் விளக்குவோம்:

சீன நாட்டில் பெகின் என்ற சிற்றூரில் ஆதிரையன் என்பான் ஒரு சிறிய குடிசையில் வசித்துவந்தான். அவன் பல நாட்களாக வறுமைவாய்ப்பட்டு வருந்தினன், பன்றிக் குட்டிகளை மேய்த்துவருவதே அவனது தொழிலாகும். ஆதிரையனுக்குப் பத்து வயதுள்ள பகவன் என்ற ஒரு மைந்தன் உண்டு, பகவன் கூரிய அறிவும் சீரிய உணர்ச்சியும் வாய்ந்தவன். ஆனால் குறும்புத்தனத்தில் அவனினும் ஒப்பாரும் மிக்காருமில்லை என்று கூறுவது புனைந்துரையாகாது. பஞ்ச பூதங்களில் பகவனுக்கு நெருப்பைக் காண்பதில் விருப்பம் அதிகம். அவன் சில சமயங்களில் குச்சிகளையும் குப்பைகளையும் கொளுத்தி அதனால் உண்டாகும் தீயின் தன்மையினைக் கண்டு இன்புறுவான்.

ஒரு நாள் ஆதிரையன் தன் பன்றிக்குட்டிகளுக்கு உணவு கொண்டுவருவதற்காக வீட்டைத் தன் மகன் பகவன் வசம் ஒப்புவித்து ஒன்பது பன்றிக் குட்டிகளையும் பத்திரமாகப் பார்த்துக்கொள்ளும்படி சொல்லித் தான் காட்டிற்குச் சென்றனன். தந்தை காட்டிற்குச் சென்றதைக் கண்ட மைந்தன் கழிபேர் உவகை கொண்டு சில குச்சிகளையும் வைக்கோலினையும் ஒன்றுசேர்த்து அவைகளைக் கொளுத்தி

---

*இது சார்ல்ஸ் லாம்ப் (Charles Lamb) என்ற ஆங்கில ஆசிரியர் வரைந்த கட்டுரையைத் தழுவியது.

அதனால் உண்டாகும் தீயின் ஒளியினைக் கண்டு களித்தான். அதுபோழ்து அத்தீயின் ஒரு சிறு பொறியானது குடிசையிற் புக, குடிசை முழுவதும் பற்றி எரிந்தது. குடிசையில் தீப் புகுந்ததைக் கண்ட பகவன் வெளியே வந்துவிட்டான். சிறிது நேரத்திற்குள் குடிசை சாம்பலாய்விட்டது. இதைக் கண்ட பகவன் மிகவும் வருந்தினான். அவன் குடிசையை இழந்ததற்கு வருந்தவில்லை. ஏனெனில், அவன் இதற்கு முன் தன் குறும்புத்தனத்தால் இரண்டு குடிசைகளைத் தீவாய்ப்படுத்தியுள்ளான். ஆனால் அவன், "அந்தோ, பன்றிக் குட்டிகளைப் பறிகொடுத்தேனே!" என்று கதறினான். தன் தந்தையின் வெகுளியினைக் கணமேனும் காத்தலரிது என் றுணர்ந்த மைந்தன், "அந்தோ, பால்மணம் மாறாத இளம் பன்றிக்குட்டிகளை இழந்தேனே! எந்தை என்னை ஒறுப்பரே! யான் யாது செய்வேன்!" என்று வருந்தினான்,

அதுபோழ்து அவன் அக்குடிசையின் பக்கத்தில் ஒரு நறுமணம் வீசக் கண்டான். அந்த நறுமணம் எக்காரணத்தா லாயதென்றும் எப்பக்கத்தினின்று வீசுகின்றதென்றும் பகவன் உணர்ந்தானில்லை. அவன் அக்குடிசையின் நாற் புறமும் சுற்றிப்பார்த்தான், பார்த்தும் பயனில்லை, தான் பிறந்தது முதல் இதுவரையில் பகவன் இவ்வித நறுமணத்தைக் கண்டானில்லை. அச்சிற்றூருக்கு அது ஒரு புத்தம் புதிய நறுமணமாகத் திகழ்ந்தது.

பிறகு பகவன் பன்றிக்குட்டிகளின் அருகே சென்று, அவைகளின் ஆவி அகத்ததோ புறத்ததோ என்பதை உணர வேண்டி, அவைகளின் உடலைச் சிறிது தொட்டான், தொட்டவுடன், தீப்பற்றிய குடிசையிலிருந்த பன்றிகளின் உடல் நன்றாக வெந்திருந்தபடியால் அவைகளின் கொழுப்பும் தசையும் பகவன் கையில் ஒட்டிக்கொண்டன. சுட்ட ஊனின் வெப்பத்தைத் தாங்கமாட்டாத பகவன் தன் விரல் களை உடனே வாயில் வைத்துக்கொண்டான். உடனே அவன் சுட்ட ஊனின் சுவையினை உணர்ந்தான்; இதுகாறும் அக்குடிசையில் வீசிய நறுமணம் சுட்ட பன்றி யிறைச்சியின் பாற் பட்டது என்பதை அறிந்துகொண்டான். இதுவரை

யில் அச்சிற்றூரில் வெந்த ஊனினைக் கண்ட மக்கள் ஒருவரு மில்லை. முதல் முதல் அச்சிற்றூரில் சுட்ட பன்றியின் சுவையை யுணர்ந்த பகவன் கொண்ட மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. அவன் குதித்தான்; ஆடினான்; "நாடினேன்; நாடி, நான் கண்டு கொண்டேன்; சுடு பன்றி இறைச்சியின் மாட்சி!" என்று பாடினான்; பிறகு அப்பன்றியின் ஊனை உண்டு களித்தான்.

காட்டிற்குச் சென்ற ஆதிரையன் வீட்டிற்குத் திரும்பி வந்து குடிசை சாம்பலாகிய நிலையினையும், பன்றியின் ஊனுண்ணும் கழிபேர் இரையானாகிய மைந்தனையும் கண்டு வெகுண்டு, அவனைத் தடியால் நையப் புடைத்தனன். அவன் அடித்த அடி சுட்ட பன்றி ஊனில் திளைத்திருக்கும் பகவனுக்கு ஈ மொய்த்தது போன்றிருந்தது. அவன் தன் தந்தை வந்ததையும் கண்டானில்லை.

**ஆதிரையன்:** அடே, விலங்கே! அங்கே என்ன செய் கின்றாய்? இதுகாறும் மூன்று குடிசைகளை அழித்தது போதா தென்று கருதியோ. இக்குடிசையினையும் தீவாய்ப்படுத்தினை?

**பகவன்:** என் அருமைத் தந்தையே! ஆ, ஆ! என்ன அருமை! என்ன அருமை! இப்பன்றிகளின் அமிழ்தினுமினிய சுட்ட இறைச்சியினை யான் என்னவென்று கூறுவேன்! தயவு செய்து தாங்களும் இச்சுட்ட ஊனினைச் சாப்பிடுங்கள்.

ஆதிரையனுக்கு அடங்காக் கோபம் பொங்கி வந்தது. அவன் மறுபடியும் தன் மைந்தனின் அரக்கத்தன்மைக்கு வருந்தி அவனை மீண்டும் வைதான். தான் பெற்ற இன்பம் தன் தந்தையும் பெறுதல்வேண்டுமென்ற பேரவாக்கொண்ட மைந்தன் மிக்க சூடாகவுள்ள அப்பன்றி ஊனினை விரைவுடன் தன் தந்தையின் கையில் வைத்தான். ஆதிரையன் உடனே திடுக்கிட்டு அவ்வூனைக்கொண்ட விரலின் சூட்டைத் தாங்க மாட்டாது யாது செய்வதென்று தெரியாது வருந்தினன். பிறகு அவனுக்கு ஒரு யுக்தி பிறந்தது. அவன் விரல்களைக் குளிர்ச்சி செய்யும் வண்ணம் வாயில் வைத்துக்கொண்டான்.

இதுகாறும் பன்றியின் வெந்த ஊனின் தன்மையைக் கனவிலும் கண்டும் கேட்டும் அறியாத ஆதிரையன் கொண்ட உவகைக்கு அளவேயில்லை. அவன் தன்னை மறந்தான்; தன் உடலையும் மறந்தான்; சுருங்கக்கூறுமிடத்து, இவ்வுலகத்தையும் மறந்தான். பிறகு மிகுந்த மகிழ்ச்சியுடன் அவனும் அவன் மைந்தனும் பன்றியின் சுட்ட ஊனினைச் சுவைபட உண்டு களித்தனர்.

அக்காலத்தில் அச்சிற்றூரிலிருந்த மக்கள் அனைவரும் பச்சை ஊனினைப் புசித்துவந்தனர். அங்கிலையிலுள்ள மாந்தர் வெந்த ஊனின் மணத்தையும் தன்மையையும் உணரார். ஆகவே ஆதிரையனும் அவன் மகனும் பன்றியைச் சுடும் வகையை அச்சிற்றூரிலுள்ள மற்ற மக்களுக்கு உணர்த்தினரில்லை. தீப்பற்றிய வீட்டினுல்தான் பன்றி இறைச்சியைச் சுட்டுத் தின்னலாம் என்று கண்ட தந்தையும் மகனும் அடிக்கடி தங்கள் குடிசையில் பன்றிக் குட்டிகளை உள்ளே அடைத்துக் குடிசையைக் கொளுத்திவிட்டு வெளியே வந்து குடிசை முற்றும் எரிந்தபின் உள்ளே சென்று பன்றிகளின் வெந்த ஊனைத் தின்று மகிழ்ந்துவந்தனர். இவ்வாருக அவர்கள் தாங்கள் குடியிருந்த குடிசையில் பன்றியை உள்ளே விட்டு அக்குடிசையினைச் சில முறை பகலிலும் பல முறை இரவிலும் தீவாய்ப்படுத்தி அதனுல் உண்டான பயனைப் பெற்றனர். வீடு பற்றி எரிந்தால்தான் பன்றியின் ஊன் பதமாகும் என்றதோர் புதிய முடிவை அவர்கள் கண்டு பிடித்தனர்.

இவர்கள் குடிசை இவ்வாறு பல முறையும் தீவாய்ப் படுவதைக் கண்ட மற்ற மக்கள் ஆதிரையனும் அவன் மகனும் செய்து வந்த காரியத்தை ஒரு நாள் கண்டுபிடித்துவிட்டனர். உடனே அவர்கள் 'ஆதிரையன் செய்யும் காரியம் அடாது' என்று கூறி, அவனையும் அவன் மகனையும் நீதிமன்றத்தில் கொண்டுபோய்ச் சேர்த்தனர்.

அன்று ஊரிலிருந்த மக்கள் அனைவரும் வேடிக்கை பார்ப்பதற்காக நீதிமன்றத்தில் வந்து நிறைந்தனர், குறித்த

நேரத்தில் நீதிபதியும் தம் இடத்தில் வந்து அமர்ந்தார். நீதிபதி தாம் தீர்ப்புச் சொல்லுமுன்னர் ஆதிரையன் குற்றவாளியோ அல்லனோ என்பதைப்பற்றி அங்கிருந்த நடுவுநிலையாளரின் (ஜூரிகளின்) கருத்தினைக் கேட்டார். அங்குள்ள நடுவு நிலையாளருள் ஒருவர், அச்சுட்ட பன்றியின் ஊனினைப் பார்த்து அதிலுள்ள குற்றத்தைக் கண்ட பின்னரே தீர்ப்புச் சொல்லுவது சாலச்சிறந்தது என்றார். அவ்வாறே நடுவு நிலையாளர் அனைவரும் பன்றியின் சுட்ட ஊனினைத் தொட அச்சூட்டினைத் தாங்கமாட்டாத அவர்களும் தங்கள் விரலினைக் குளிர்ச்சி செய்யும்வண்ணம் வாயில் வைத்துக் கொண்டனர். அவர்களும் சுட்ட இறைச்சியின் மாட்சியை உணர்ந்தனர். அதனால் உடனே அவர்கள் ஆதிரையன் குற்றமற்றவன் என்று நீதிபதியிடம் கூற, அவரும் அவ்வாறே தீர்ப்புக் கூறினார்.

நடுவுநிலையாளர் அனைவரும் ஆதிரையன் குற்றமற்றவன் என்று ஒருமனப்பட்டுச் சொல்வதற்கு ஏதாவது காரணம் இருக்கவேண்டுமென்று நீதிபதி யூகித்து அறிந்துகொண்டார். பிறகு அவர் ஒரு தனியிடத்திற் சென்று அந்தச் சுட்ட இறைச்சியினைத் தாமும் தொட அச்சூட்டினைப் பொறுக்க மாட்டாது தாமும் தம் விரல்களைக் குளிர்ச்சி செய்யும் வண்ணம் வாயில் வைத்துக்கொண்டார். உடனே அவரும் சுட்ட ஊனின் உண்மையையும் தன்மையையும் அறிந்து வீட்டை எரித்தால்தான் பன்றியின் ஊனைச் சுட்டுத் தின்ன லாம் என்ற முடிவை அறிந்துகொண்டனர். மறுநாள் நீதிபதி வீட்டிலும் தீப்பற்றி எரிந்தது. அவரும் தம் வீட்டில் பன்றியை உள்ளே வைத்து வீட்டைக் கொளுத்தி அதனா லுண்டாகிய சுட்ட பன்றி இறைச்சியை உண்டு உவந்தனர். வீட்டைச் சுட்டால்தான் பன்றியின் வெந்த ஊனினைத் தின்னலாம் என்பதை அச்சிற்றூரிலுள்ள மக்கள் அனைவரும் அறிந்துகொண்டனர். அன்று முதற்கொண்டு அவ்வூரில் ஒவ்வொரு வீடும் பற்றி எரிந்தது. விறகின் விலையும் பன்றிக் குட்டிகளின் விலையும் உயர்ந்துவிட்டன. ஒவ்வொரு நாளும் சுமார் ஐம்பது வீடுகள் தீவாய்ப்பட்டன.

பிறகு சில நாட்கள் சென்றவுடன் வேற்றூரிலுள்ள ஒருவர் அச்சிற்றூருக்கு வந்து சேர்ந்தார். அம்மக்களின் அறியாமையைக் கண்ட அவர், அவ்வூரிலுள்ள மக்களுக்குப் பன்றியின் இறைச்சியையும் மற்ற விலங்குகளின் இறைச்சியினையும் சுடும் விதத்தினை எடுத்து விளக்கினர். பன்றி இறைச்சியினைப் பதம் செய்வதற்கு ஒரு வீட்டை முழுவதும் எரிக்கவேண்டிய அவசியமில்லை யென்றும், அடுப்பில் வைத்து ஊனைச் சுடலாமென்றும் கூறி அம்மக்களுக்கு அறிவுறுத்தினர். பின்னர் நாகரிகம் முற்றியவுடன் எல்லா மக்களும் பன்றி இறைச்சியினையும் மற்ற விலங்குகளின் இறைச்சியினையும் எம்முறையில் வேகவைத்தல், வறுத்தல், சமைத்தல் என்பன போன்ற முறைகளை உணர்ந்துகொண்டனர்.

# 6. வாணிகம்

[வித்துவான் தி. சி. குழந்தைவேல் முதலியார்]

உலக மக்கள் உயிர்வாழ்வதற்கு உறுதுணையாயுள்ள தொழில்கள் மூன்று. அவை உழவு, கைத்தொழில், வாணிகம் என்பனவாம். இம்மூன்றில் வாணிகம் ஏனைய இரண்டிற்கும் அடிப்படையாய் அமைந்துள்ளது.

பண்டைக்கால மக்கள் பண்டமாற்ருகவே வாணிகத்தை நடத்திவந்தனர். பண்டமாற்ருவது, மிகுதியாயுள்ள நெல்லேயோ, வேறு எந்தப் பொருளேயோ கொடுத்துவிட்டுத் தேவையான பொருளே வாங்கிக்கொள்வதாகும். இப்பழக்கம் இன்னும் நமது நாட்டிலிருப்பதை நம் வீட்டுப் பெண்கள் தெருவில் கூவிக் கொண்டுவரும் அங்காடிப் பெண்களிடம் அரிசியைக் கொடுத்துத் தங்களுக்குத் தேவையான கீரை, கறிவேப்பிலே, கொத்துமல்லி, காய்கறி முதலியனவும், நாவற்பழம், இலந்தைப் பழம் முதலியனவும் வாங்குவதாலும், நெல் அறுவடைக் காலத்தில் நெற்களங்களில் கூலியாட்கள் நெல்லேக் கொடுத்துத் தங்களுக்குத் தேவையான தின்பண்டம். வெற்றிலேப்பாக்கு முதலியன வாங்குவதாலும் அறியலாம். பிறகு வரவரப் பொதுவாய் வழங்கக்கூடிய நாணயம் ஏற்பட்டு வாணிகம் சீர்பெற நடக்கலாயிற்று.

இவ்வாணிகத்தைச் **சிறு வாணிகம்**, **பெரு வாணிகம்** என இருவகையாகக் கொள்ளலாம். சிறு வாணிகமாவது, ஒரு ஊரிலுள்ள மக்களுக்குத் தேவையான பொருள்களே அவ்வூர் மக்களோ, பிறவூர் மக்களோ சிறிய அளவாக விற்பதாகும். பெரு வாணிகமாவது, ஒரு நாட்டு மக்கள் மற்ருெரு நாட்டு மக்களுக்குத் தேவையான பொருள்களேத் தரை வழியாகவோ, கடல் வழியாகவோ பெரிய அளவாக அனுப்பி விற்பதாகும். கடல் வழியாகச் செய்யும் வாணிகத்தைக் கடல் வாணிகம் என்பர். அவரவர் தனித்தனியே செய்யும் வாணிகத்தைத் **தனி வாணிகம்** என்றும், பலர் கூடிச் செய்யும் வாணிகத்தைக் **கூட்டு வாணிகம்** என்றும் கூறுவதுண்டு.

சிறு வாணிகம் செழித்த பின்னரே பெரு வாணிகம் பிறந்திருக்க வேண்டும்.

வாணிகம் வளர்ந்துள்ள நாடே நாகரித்தில் நனி சிறந்த நாடாகும். தற்பொழுது சிறந்து விளங்கும் அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்சு, ஜெர்மனி, இத்தாலி, இரசியா முதலிய மேனடுகளெல்லாம் வாணிகத்தை ஏணியாகக் கொண்டே முன்னேறியுள்ளன என்பது அவ்வந்நாட்டு வரலாறுகளை யறிந்தோர் நன்குணர்வர். சுருங்கச் சொன்னல், முன்னேற்றத்தில் முனைந்து சுழலும் தற்கால அரசியற் சக்கரங்களெல்லாம் வாணிகம் என்னும் அச்சிலேயே சுழன்றுகொண்டிருக்கின்றன எனலாம்.

இங்ஙனம் வாணிகத் துறையில் வளஞ்சிறந்த இந்நாடுகள் நாகரிக மடையத் தொடங்குவதற்கு முன்னரே அஃதாவது, கிறிஸ்து பிறப்பதற்குப் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னமேயே இந்திய நாடு வாணிகத்தில் மேம்பட்டிருந்ததென்று வரலாற்று நூல்வல்லார்கள் நுனித்தறிந்து நுவலுகிருர்கள். இந்தியாவின் விளைபொருள்களையும், சிறந்த கைத்தொழில்களையும் கேள்வியுற்ற **கிரேக்கர், உரோமர், அராபியர், எகிப்தியர், பாரசீகர், சீனர்** முதலியவர்களெல்லாம் பழங்காலத்தில் இந்தியரோடு வாணிகம் புரிந்தனரென்பதை வரலாற்று நூல் வாயிலாய் அறிகிருேம். இன்னும் பறங்கியர், ஒல்லாந்தர் முதலியோர் இந்தியாவோடு வாணிகம் புரிவதற்குப் போட்டியிட்டு முனைந்திருக்கிருர்களென்பதையும், இதுகாரணமாய்ப் பல போர்கள் நடந்திருக்கின்றன என்பதையும் நாம் நன்கு அறியலாம். தென்னிந்தியாவிலிருந்து ஆண்டுதோறும் உரோம் நாட்டிற்கு ஏற்றுமதியாகும் சரக்குகளின் விலை ரூ. 75,00,000 என்று **பிளினி** என்பவர் கூறுகிருர்.

கி. மு. 1700-ல் **ஜோசப்** என்பானெருவன், வாணிகத்திற்குரிய பல்வகைப் பொருள்களை இந்தியாவிலிருந்து எகிப்து, சிரியா, பாபிலோனியா முதலிய இடங்களுக்கு அனுப்பினனென்றும், கி. மு. 10-ஆம் நூற்றுண்டில் யூத இராச்சியம் ஒன்றுக்கு அரசனை **சாலமன்** என்பவன் இந்தி

யாவிலிருந்து சந்தன மரம், குரங்கு, மயில், தங்கம், வெள்ளி, தந்தம் முதலிய பொருள்களையெல்லாம் தன்னாட்டுக்கு ஏற்றுமதி செய்துகொண்டு போனானென்றும் கூறுவர்.

தமிழில் மயிலைக் குறிக்கும் 'தோகை' என்னும் செந்தமிழ்ச் சொல், ஈபுரு மொழியில் 'துகி' என்று காணப்படுவதால், மயில் தென்னாட்டில் சாலமனால் கொண்டுபோகப்பட்டிருக்கவேண்டு மென்றும், 'அரிசி' என்னும் தமிழ்ச்சொல் கிரேக்க மொழியில் 'அருஸ்' என்றும், ஆங்கிலத்தில், 'ரைஸ்' என்றும் காணப் படுவதால், கிரேக்க வணிகர்கள் தமிழ்நாட்டிலிருந்து அரிசியை ஏற்றுமதி செய்து ஐரோப்பாவிற்குக் கொண்டுபோயிருக்க வேண்டுமென்றும் கூறுவர். கொச்சியிலிருந்து மிளகும், உறையூரிலிருந்து நேர்த்தியான ஆடையும் பிற நாடுகளுக்கு ஏற்றுமதியான செய்தி பெரிபுளூஸ் என்னும் நூலால் தெரிய வருகிறது.

பண்டைத் தமிழர் வாணிகத்தில் மேம்பட்டிருந்தனர் என்பதற்குத் தமிழ் நூல்களில் அளவிறந்த குறிப்புக்கள் காணப்படுகின்றன. பத்துப்பாட்டு, புறநானூறு, சிலப்பதி காரம், மணிமேகலை முதலிய நூல்களில் 'யவனர்' என்னும் சொல் வழங்கப்பட்டுள்ளது. 'யவனர்' என்னும் சொல்லுக்குச் 'சோனகர்' என்றும், 'மிலேச்சர்' என்றும் உரையாசிரியர்கள் உரை வரைகிறார்கள். இவை, தமிழ் மக்களோடு வாணிகம் புரிய வந்த கிரேக்கரையும் உரோமரையும் குறிப்பனவாகத் தோன்றுகிறது.

இன்னும், 'முந்நீர் வழங்கு நாவாய்', 'மயங்கு காலெடுத்த வங்கம்', 'பரிமுக அம்பி', 'வளி புடைத்த கலம்' என்னும் தொடர்களில் 'கப்பல்' என்று பொருள்படும் நாவாய், வங்கம், அம்பி, கலம் என்னும் சொற்கள் வந்துள்ளமையால், பண்டைத் தமிழர் கப்பலை நன்கறிந்திருந்தார்களென்பதை உணரலாம். மரக்கலங்கள் குதிரை முகமாகவும், யானை முகமாகவும், சிங்க முகமாகவும் செய்யப்பட்டிருந்தன என் பதைச் சிலப்பதிகாரம் என்னும் செந்தமிழ்க் காப்பியம் தெரி விக்கிறது, 'கலம்புணர் மக்கள்', கலஞ்செய் கம்மியர்'

என்னும் மணிமேகலைத் தொடர்கள், கப்பலிற் சேர்ந்து தொழில் செய்வோரைக் குறிக்கின்றன. இத்தொடர்களே கப்பல் செய்வோரைக் குறிக்கின்றனவென்றும் கொள்ளலாம். **'நீயான்' 'மீகாமன்'** என்னும் சொற்கள், கப்பலோட்டும் மாலுமிகளுக்குப் பெயராய் வழங்கப்பட்டுள்ளன. 'நீரினின்று நிலத்தேற்றவும், நிலத்தினின்றும் நீர்ப்பரப்பவும், அளந்தறியாப் பல பண்டம், வரம்பரியாமை வந்தீண்டி' என்னும் பட்டினப்பாலையின் அடிகளால் ஏற்றுமதி இறக்குமதியாகுஞ் செய்தி இனிது விளங்குகிறது. தமிழ்நாட்டுத் துறைமுகங்களாக அக்காலத்தில் **கொற்கை, முசிறி, தொண்டி, புகார்** முதலிய நகரங்கள் சிறந்து விளங்கியுள்ளன என்பதையும் பழைய தமிழ் நூல்களில் விளக்கமாய்க் காணலாம்.

ஏறக்குறைய கி. மு. முதலாவது நூற்றுண்டில் விளங்கியவனுகக் கருதப்படுகிற சோழன் கரிகாற் பெருவளத்தான் என்னும் சிறந்த மன்னன், காவிரிப்பூம்பட்டினத்தை மாட்சியுடன் ஆட்சி புரிந்துவந்த காலத்தில், கடற்கரை ஓரத்திலிருந்த மருவூர்ப் பாக்கத்தே, திசை மயங்கிச் செல்லும் கலங்களைத் திசைக் குறிகாட்டியழைக்கும் **கலங்கரை விளக்கம்** (Light house) துறைமுகத்தருகே கட்டப்பட்டிருந்தது. கடல்வழியாக நாவாய்களிலே கொண்டுவரப்படும் பண்டங்களைத் தீர்வை வரையறுத்துக் கயமை கொள்ளும் **ஆயத் துறைகளும்** (Customs house) அமைக்கப்பட்டிருந்தன, சுங்கம் இறுத்த பின்னர், சோழ வேந்தரின் அடையாள முத்திரையாகிய புலி இலச்சினையிட்ட பண்டப் பொதிகளைக் கொண்டுசேர்க்கும் **பண்டசாலைகளும்** (Warehouse), **கிடங்குகளும்** (Godowns), **உயர்ந்த மேடைகளும்** (Docks and piers) இருந்தன. இவற்றையடுத்து **யவன, சீன, சாவக** வியாபாரிகளின் மாளிகைகள் இருந்தன என்று பண்டித எல். உலகநாத பிள்ளையவர்கள் தாமெழுதிய 'சோழன் கரிகாற் பெருவளத்தான்' என்னும் அரிய ஆராய்ச்சி நூலில் வரைந்துள்ளார்கள்.

பண்டைக்காலத் தமிழ்ப் புலவர்களிற் சிலர் வாணிகத்தை மேற்கொண்டிருந்தார்களென்று தெரிகிறது. உறையூர்

இளம்பொன் வாணிகனார். மதுரை அறுவை வாணிகன் இளவேட்டனார், மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார் முதலிய புலவர்களெல்லாம் வாணிகத் தொழிலை மேற் கொண்டிருந்தார்களென்பதை அவர்கள் பெயர்களாலேயே நன்கறியலாம்.

இங்ஙனம் பண்டைக்காலத் தமிழர் கல்வியிலும் வாணி கத்திலும் மிக மேம்பட்டிருக்க, தற்காலத்தில் அவர்கள் தாழ் வடைந்திருக்கிறார்கள் என்பதை விண்டு கூறவேண்டுவதில்லை. இந்தியா வாணிகத்தில் வளஞ் சிறந்திருந்த காலத்தில் தாழ்ந்த நிலையிலிருந்த ஆங்கிலேயர்கள், தற்காலத்தில் வாணகத் துறையில் முன்னேறி, அது காரணமாகவே இந்தியாவுக்கு வந்து, இந்தியா முழுவதையும் தங்கள் ஆட்சிக்குட்படுத்தி ஆண்டுவந்தார்களென்றால், வாணிகத்தில் எந்த நாட்டு மக்கள் வளர்ச்சியடைந்துள்ளார்கள் என்பதை வகுத்துரைக்க வும் வேண்டுமா ?

நம் நாட்டில் கற்றவர்கள் வாணிகத் துறையில் பெரிதும் ஈடுபடுவதில்லை. மேனாட்டார் வாணிகத் துறையில் வீறு கொண்டு விளங்குவதைக் கண்டும், வாணிகத்தை வளர்ப்ப தற்கே ஒரு நாடு மற்றொரு நாட்டைக் கைப்பற்றுவதற்கு விழைந்து சூழ்ச்சிகள் பல செய்து முனைகிறதென்பதை யறிந்தும் நம் நாட்டாருக்கு விழிப்பேற்படவில்லையென்றால், 'முன்னேற்றம்', 'முன்னேற்றம்' என்று வாயளவில் கூறுவதால் வரும் பயனென்ன ? இந்தியாவிலேயே வட நாட்டார் வாணிகத் துறையில் சிறந்து விளங்குவதையொப்பவும் தென்னாட்டார் சிறக்கவில்லையெனில், வாணிகத்தைப்பற்றித் தமிழர்க்கு அத்துணை ஊக்கமில்லை யென்றுதானே உரைக்க வேண்டியிருக்கிறது? இக்கால இளைஞர்களே பிற்காலப் பெரியோர்களாதலின், வருங்காலத்திலேனும் தமிழ்நாட்டு வாணிகம் தழைத்தோங்குதற்கு மாணவர்கள் மனங் கொள்ளுவார்களாயின், நம் நாடும் பொன்னாடெனப் பொலியு மென்பதில் ஐயமில்லை.

# 7. நலங்கிள்ளியும் கோவூர்கிழாரும்

(ஆ. கார்மேகக் கோனர்)

இன்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னர்ச் சோழநாட்டில் சோழ பரம்பரையில் தோன்றி, அரசர்க்குரிய அஞ்சாமை, ஈகை, அறிவு, ஊக்கங்களில் எஞ்சாது, பல நற்குணங்களும், நல்லொழுக்கமும், புலவர் பாடும் புகழும் உடையவனய்ச் சோழன் நலங்கிள்ளி என்பான் விளக்க முற்றிருந்தான். அவன் கோவூர் கிழாரது புலமையின் திறத்தையும், உலகியல் ஞானப் பரப்பையும் கேள்வியுற்று, "மனந் தூய்மை செய்வினை தூய்மை இரண்டும், இனந் தூய்மை தூவா வரும் என்பர் ஆன்ரோர். அருட்பெருங் குணமே ஒருருவெடுத்தாலனையார் கோவூர்கிழார். அப் பெரியாரை என்று தலைக்கூடுவேன், என்று பீடுபெறுவேன்!" என்று இங்ஙனமெல்லாம் எண்ணி, அவர்பால் அன்புமீதூரப் பெற்றவனய், அவரைத் தன் அவைக்களத்துக்கு அழைத்தான். புலவரும், தம்போன்ற புலவர்கள் அருமை பெருமைகளை அறியும் அறிவு மிகுந்த அவன்பால் செல்லுவதற்கு விழைந்து, அவனது அவைக்களத்தை அடைந்தார். அன்று முதல் இருவரும் கலந்த அன்பும் நண்பும் உடையவராயினர். புலவர் அரசனது மாட்சியெல்லாந் தெரிந்து, அவனது வீரம், நியாயம், தியாகம் முதலியன விளங்குமாறு எடுத்துக் காட்டான பாட்டுக்கள் பல தொடுத்து, அவனை மகிழ்ச்சியுட் படுத்துவாராயினர்.

இங்ஙனம் இவர்கள் உழுவலன்பு பூண்டு ஒழுகும் நாளில் சோழர் குடியிலே பிறந்தவனகிய நெடுங்கிள்ளி என்பவனுக்கும், இந்நலங்கிள்ளிக்கும் சோழநாட்டு அரசுரிமை பற்றிப் பெரிய வழக்குகள் பல நடந்து, அவை தீராது பகை மூண்டு, இருவர்க்கும் பல இடங்களில் பெரும்போர் பல நிகழ்ந்தன. அங்ஙனம் நிகழ்ந்தபோது ஒரு முறை நெடுங்கிள்ளி நலங்கிள்ளியோடு எதிர் நின்று பொருதற்கு ஆற்றுயைப் போய்ச் சோணாட்டு ஆவூர்க் கோட்டையைத் தனக்கு அரணுகக்கொண்டான். அதனை அறிந்த நலங்கிள்ளி, அக்

கோட்டையைத் தன்னகப்படுத்தக் கருதிப் பெருத்த சேனையோடு வஞ்சி சூடி மதிற்புறத்தை வளைத்துப் பெருஞ் சமர் புரிந்தான். நெடுங்கிள்ளியோ, நொச்சி சூடி மலைந்து காவாது மதிலினை அடைத்துக்கொண்டு மனமொடுங்கி வாளா ஒரு புறத் தொதுங்கி இருந்தனன். முற்றுகையோ, பன்னாள் நீடித்தது. மதிலகத்து நீரும் உணவும் முதலான ஏமப் பொருள்கள் சுருங்கினமையால், உள்ளிருந்த படைஞர்களும் மக்களும் பிறவும் கூறவொண்ணாத் துயர மீக்கூர்ந்தனர்.

இத்தகைய கொடுமையான நிகழ்ச்சியை அறிந்தார் நம் புலவர். அருள் வெள்ளம் பெருகும் இவரது உள்ளம் இதனைப் பொறுக்குமோ? உடனே புலவர் விரைந்து வந்து அடைத்துக் கொண்டிருக்கும் நெடுங்கிள்ளிக்குத் தமது வருகையை உணர்த்தி உட்சென்று அவனைக் கண்டார்; கண்டு, சோழனை நோக்கி 'அரசே, யானைகளெல்லாம் குளத்திற் படிந்து குளியாமலும், நெற்கவளம் முதலியவற்றைப் பெருமலும், கம்பங்களைச் சாய்த்து நிலத்தின்மேற் புரளுங் கைகளை யுடையனவாய்ப் பெருமூச்சுவிட்டுச் சுழன்று இடிபோல முழங்கவும், பால் இல்லாமல் குழந்தைகள் அழவும், மகளிர் பூக்களால் தங்கள் கூந்தலை அலங்கரியாமலிருக்கவும், குடிகள் எல்லாம் தண்ணீரும் இல்லாத தங்கள் வீடுகளிலிருந்து வருந்திக் கூப்பிடும் கூப்பீட்டைக் கேட்கவும், இவற்றிற் கெல்லாம் நாணுமலும் இரங்காமலும் இவ்விடத்து நீ இனிதாக இருத்தல் சாலக் கொடியதாகும். வலிமிக்க குதிரைப் படைகளையுடைய தோன்றலே! நீ உண்மையாக அறத்தை யுடையையாயின், உனது குலத்தவனும் இப்போது பகைவனுமாயிருக்கின்ற இவன் முன்னிலையில், 'இக்கோட்டை உன்னுடையதன்றோ?' என்று சொல்லித் திறத்தல் செய்வாயாக; அன்றி, வீரமுடையையாயின், போர் செய்து வென்று, விரைவில் திறப்பாயாக. நீ இவை இரண்டு மின்றித் திறவாமல் அடைக்கப்பட்ட திண்ணிய கதவினை யுடைய பெரிய மதிலுள்ள ஒரு பக்கத்தே ஒதுங்கியிருத்தல் மிகவும் நாணுந் தன்மையுடையது," என்னுங் கருத்துப்பட, அருள் வெள்ளம் ததும்பும் ஒரு பொருள் பொதிந்த பாடலைக் கூறினர். கூறலும், அஃது அவனது உள்ளத்திற் சென்று

பெருகிற்று; உடனே அரசன் அடை மதிலைத் திறந்துவிட்டு, உறையூர் போய் அரண் செய்து, உள்ளிருந்தான். நலங்கிள்ளி ஆவூரைக் கைப்பற்றிக்கொண்டான்.

இங்ஙனம் ஆவூர்க் கோட்டையை முற்றுகை செய்து கைப்பற்றியிருந்த சோழன் நலங்கிள்ளிபால், இளந்தத்தன் என்னும் பெயர் வாய்ந்த புலவரொருவர் வந்து பரிசில் வேண்டிப் பெற்றுக்கொண்டு, பின்னர் உறையூர் போய் நெடுங்கிள்ளியை அடைந்து, பரிசில் வேண்டினர். அப் புலவரை நெடுங்கிள்ளி, "இவன் உண்மைப் பரிசிலாளன் அல்லன்; நம் பகைவனாகிய நலங்கிள்ளியிடமிருந்து இவ் விடத்திய இரகசியங்களை அறிந்து போவதற்கு வந்த ஒற்றனே யாவன்," என்று பிழைபடக் கருதிப் புலவரைக் கொல்லு தற்குத் துணிந்தனன். இக்கொடுஞ் செயலைக் கேள்வியுற்ற புலவர் பெருந்தகையாம் கோவூர் கிழார், விரைந்து சென்று, புலவரை உயிர் இறுதியினின்றும் உய்விக்கக் கருதி, உறையூர் புகுந்து அரசனை யணுகி, "அரசே, இப்புலவரைப்பற்றி நீ உட் கொண்ட கருத்துப் பிழைபட்டதும் அநியாயமானதும் ஆகும். இவர் பகை வேந்தரிடமிருந்து ஒற்றுவந்தவரென்று கருதற்க; புலவரது வாழ்க்கை வஞ்சங் கலவாப் புனித முடையது என்பதனை நீ அறிந்ததில்லையோ! வள்ளல்களா யுள்ளவர்களை நினைத்துப் பழுத்த மரங்களை நாடிச் செல்லும் பறவைகள் போலச் சென்று, கடந்து செல்லு தற்கரிய வழிகளைத் தூரமென்று கருதாமற் கடந்து, தம் நாவால் இயன்ற அளவு பாடி, அங்கே பெற்ற பரிசிலால் மகிழ்ந்து, தம் சுற்றத்தாரை அவற்றைக்கொண்டு உண்பித்துத் தாமும் உண்டு, பொருளில் பற்றின்றி, உள்ள மலர்ச்சியோடு பிறர்க்கும் கொடுத்துத் தம்மோடு கல்வி முகத்தால் போர் நிகழ்த்தவருவாரோடு சொற்போர் நிகழ்த்தி, அவர் நாணத் தம் கல்வியால் வென்று, அதனால் வரும் பெருமிதத்தோடு தலையெடுத்து நடந்து, இனிதாக ஒழுகும் அவ்வளவன்றிப் பிறர்க்கு ஏதேனும் கொடுமை செய்தலை அறிந்ததோ? இல்லை; இஃதன்றியும், அரசாளும் செல்வமுடைய உங்களைப்போன்ற பெருமையுடையதாகும்," என்று புலவர்களின் வாழ்க்கை

நலத்தை அரசனது உள்ளத்திற் பதியுமாறு சாதுரியமாய்க் கூறி. அவனது தீய எண்ணத்தை மாற்றி இளந்தத்தன் என்னும் அப்புலவரை உய்வித்தார்.

புலவர் உறையூரில் இம்மகோபகாரச் செயலைப் புரிந்து அமர்ந்திருக்குங்கால், ஆவூரைக் கைப்பற்றியிருந்த சோழன் நலங்கிள்ளி நால்வகைப் படையுடன் போந்து, உறையூரையும் முற்றுகை செய்து, பெரும்போர் தொடங்கினான். இதனை அறிந்த அருள் வடிவினரான புலவர் சிகாமணி, ஒரு குடியிற் பிறந்தும் அன்புரிமையின்றிச் செற்றம்பூண்டிருக்கும் அவர்கள் தன்மைக்கிரங்கி, மனம் பொறாமல், எவ்வாற்றாலேனும் இவருடைய பகைமையை யொழித்து, ஒற்றுமைப்படுத்துவேன்.' எனத் தம்முட் கருதி, அடைத்தும் முற்றியும் நிற்கும் அவ்விரு வேந்தரிடஞ் சென்று, அவர்களை நோக்கி, "அரசர்களே, பகைத்து நிற்கும் உம்மிருவருள் ஒருவனும் பனம்பூ மாலையை அணிந்தவனல்லன் (சேரன் அல்லன்); அல்லது வேப்பமாலை சூடியவனல்லன் (பாண்டியன் அல்லன்); உன்னுடைய மாலையும் ஆத்தியால் தொடுக்கப்பட்டது; உன்னுடன் பொருவோனது மாலையும் ஆத்தியால் தொடுக்கப்பட்டது. (நீவிர் இருவீரும் சோழரே.) ஆதலால் உங்களுள் எவர் தோற்றாலும், தோற்பது உங்கள்குடியேயன்றி வேறன்று; இருவரும்வெல்லுதல் என்பதோ உலகத்தியற்கையன்று; இவற்றால் உங்கள் செய்கை குடியின் பெருமைக்குச் சிறிதுந் தக்கதே யன்று; அன்றியும், இந்த யுத்தம் உங்களைப் போன்ற பெருவேந்தர்களாயுள்ள ஏனையோர்க்கு உடம்பு பூரிக்கும் உவகையைச் செய்யும்; ஆதலால் இனி இப்போரை அறவே விட்டொழியுங்கள். இதுவே உமக்குத் தக்கதாகும்," என்னும் பொருள்பட

"இரும்பனை வெண்டோடு மிலைந்தோன் அல்லன்
கருஞ்சினை வேம்பின் தெரியலோன் அல்லன்:
நின்ன கண்ணியும் ஆர்மிடைந் தன்றே; நின்னொடு
பொருவோன் கண்ணியும் ஆர்மிடைந் தன்றே;
ஒருவீர் தோற்பினுந் தோற்பதுங் குடியே;
இருவீர் வேறல் இயற்கையு மன்றே; அதனால்
குடிப்பொரு ளன்றுநும் செய்தி; கொடித்தேர்
நும்மோ ரன்ன வேந்தர்க்கு
மெய்ம்மலி யுவகை செய்யுமிவ் விகலே."

என்று தமது விரிந்த சிந்தையிற் சுரந்தெழுந்த பாட்டினுல் உண்மையைப் பசுமரத்தாணிபோல இருவருள்ளத்தும் பதியக் கூறி, அவருள் நெடுக நிகழ்ந்துவந்த செற்றத்தை நீக்க முற்பட்டனர். அதனைக் கேட்ட அரசர் இருவரும் அத்தகைய புலவர் பொருளுரையைப் போற்றி அதன் வழியே நின்று, பகைமை நீங்கி, அன்பு கலந்த உள்ளத்தராகாது மறுத்துரைக்கவும் ஒருப்படுவரோ? புலவர் கூறியவாறே இருவரும் போரொழிந்தனர்.

பின்பு நலங்கிள்ளி புலவரது அருட்பெருங் குணத்தினையும், பிறர்க்கெனவே முயலும் பெற்றியையும், வெள்வேலேந்தும் வேந்தராயினும் அவரிடம் உண்மையை அஞ்சாது கூறும் ஆற்றலையும் கண்டு வியந்து, 'பெறுதற்கரிய இத்தகைய பெரியோர் நட்பைப் பெறுதற்கு யான் செய்த புண்ணியம் என்னையோ!' எனப் புகழ்ந்து கூறிப் புலவர்பால் முன்னையினும் பன்மடங்கதிகமான நண்புரிமை கொண்டான். அதுமுதல் அரசன் புலவருடன் இடையருது பழகிப் புலவரது திட்பமிகுந்த நட்பென்னும் புணையால் தமிழென்னும் அளப்பருஞ் சலதியைக் கரைகண்டவனுய், அமிழ்தென்னும்படியான கவிகள் பல பாடும் வன்மையுற்று, புவியரசாதலோடு கவியரசாகவும் விளங்கினுன், புலவரும் வள்ளியோனுகிய நள்ளியினது தமிழ் மொழிப்பற்றையும் பெருங்குணத் திறனையும் கண்டு அன்பு மிகப் பெற்று, அவ்வப்போது அவனது பெருந்தகைமைகள் பொருந்தத் திருந்திய பாக்கள் பல பாடுவாராயினர்.

---

# குறிப்புரை

## 1. பழைய உரைநடை

1. இமில் - கொண்டை; ஏறு - காளை; சோர்தல் - உகுதல்; மறி மடங்கி - ஆட்டுக்குட்டிகள் துள்ளி; மான் - பசு; அற்று - அறுந்து; மனம் மயங்காதே - உள்ளம் வருந்தாதே; தம்முன் - பலராமன்; வாலை - இளமை; பிஞ்ஞை - நப்பின்னை.

2. வற்கடம் - வறுமை; கடுகுதல் - மிகுதல்; சிட்டர் - பணியாளர்; தேயம் - மொழியிடைப் போலி; உள்ளி - நினைத்து; புடைபடக் கவன்று - மிகவும் வருந்தி; மதுரை ஆலவாய் - இருபெயரொட்டுப் பண்புத்தொகை; அழல் + நிறம் = அழனிறம்.

### வினாக்கள்

1. ஆயர்பாடியில் ஏற்பட்ட தீய நிமித்தங்கள் யாவை ?
2. துன்பம் தவிர்க்க ஆயர்பாடியினர் செய்யும் செயல் என்ன ?
3. பாண்டியன் சிட்டரை அழைத்துச் சொல்லியவை யாவை ?
4. நாடு நாடாயின ஞான்று மன்னன் கூறிய செய்தியையும், அதற்கவர் கூறிய மாற்றத்தையும் எழுதுக.
5. பொருளிலக்கணம் பெறுதபோது பாண்டியன் சொன்னதென்ன ?
6. மன்னனது கவலையைப் போக்கி ஆலவாய்க் கடவுள் செய்ததனைக் கூறுக.

### கட்டுரை

பொருளதிகாரம் பெற்ற வரலாறு.

குரவைக் கூத்து.

## 2. மனுநீதி சோழர்

பாலியம் - இளமை; பரபரப்பு - இரட்டைக் கிளவி; மலடு - மகப் பெறுதோர்; சிநேகிதர் - நண்பர்; விருக்ஷம் - மரம்; தூஷணம் - வசவு; சூன்று - தோண்டி; ஏளனம் - பரிகாசம்; அஞ்சனம் - மை.

### வினாக்கள்

1. மனு மன்னன் எவ்வாறு மகிழ்ந்திருந்தான் ?
2. மனுவின் மகன் பழிப்பிள்ளை ஆனது எவ்வாறு ?
3. 'மலடாயிருந்தாலும் வாழ்வுண்டு'—இடங்காட்டி விளக்குக.
4. தான் எத்தகைய பாவம் செய்திருப்பின் இத்தகைய கேடு நேர்ந்திருக்கலாமென மன்னன் கூறுகின்றான் ?
5. நிலையிலா உயிர்க்கஞ்சி மன்னன் செய்யாதிருந்த செயல்களை எழுதுக.
6. மண்ணும் விண்ணும் மனுவை எப்படிப் புகழ்ந்தது ?
7. செங்கோலையும், சக்கரத்தையும் பழித்து மன்னன் கூறிய சொற்களைக் கூறுக.
8. மனு என்னும் பெயருக்கு மன்னன் கூறும் விளக்கமென்ன ?

9. கன்று பிழைத்தெழ மன்னன் செய்வதாகக் கூறிய செயல்களை எழுதுக.

### கட்டுரை

பசுவின் கன்று தேர்க்காலில் மடிந்தது.
பசுவின் கன்றுக்காக மன்னன் வருந்திய விதம்.

## 3. நாகப்பட்டினம்

என்ன - போல; நன்மை + நிலை = நன்னிலை; கந்தம் - மணப்பொருள்; பேரரசு - சாம்ராஜ்யம்; கடல் + துறை = கடற்றுறை; விகாரம் - பௌத்தர் கோயில்; பள்ளிச் சந்தம் - பௌத்த விகாரத்திற்கு விடப்பட்ட இறையிலி நிலம்; மூன்று + துறை = முத்துறை.

### வினாக்கள்

1. சோழநாட்டின் எல்லைகளைக் குறிப்பிடுக.
2. காவிரிப்பூம்பட்டினம் எப்போது அழிந்தது? இதனை நாம் எவ்வாறு அறிகிறோம்?
3. நாகப்பட்டினத்தை மூவரும் எங்ஙனம் பாராட்டியுள்ளனர்?
4. பெரிய புராணத்திலிருந்து நாகப்பட்டினத்தைப்பற்றி நாமறிவன யாவை?
5. நாகையைப் பற்றி நாமறியும் வரலாற்றுச் சான்றுகள் யாவை?
6. சோழ மன்னர் பௌத்த சமயத்தை எங்ஙனம் ஆதரித்தனர்?
7. வசைபாடும் காளமேகம் நாகைச் சிறுவர்களை ஏன் வாழ்த்தினர்?
8. 'திருநாகைக் காரோணப் புராணம்' தோன்றிய வகையை வரைக.

### கட்டுரை

காளமேகப் புலவரும் நாகைச் சிறுவர்களும்.
சமய குரவர்கள் பாராட்டிய நாகைப்பட்டினம்.
திருநாகைக் காரோணப் புராணத் தோற்றம்.

## 4. தமிழன் உள்ளம்

உள்ளும் - நினைக்கும்; வெறுக்கை - செல்வம் (துறவியால் வெறுக்கப் படுவது); பரக்க - விரிவாக; பொறுது - பொறுக்காமல்; மாய்ந்த - இறந்த; ஒன்று + ஐயம் = ஓரையம்; தமியர் - தனித்தவர்; 'அயர்விலர் - சோர்வில்லாதவர்; நோன்றாள் - வலிமை; பொருண்மொழிக்காஞ்சி - புறத்துறைகளில் ஒன்று; கவற்சி - கவலை; ஒறுத்தல் - தண்டித்தல்; பொர - போர் புரிய; யாணர் - புது வருவாய்; வரம்பு - எல்லை; இகவாது - கடக்காமல்.

### வினாக்கள்

1. மனிதன் உயர்வையும் தாழ்வையும் எங்ஙனம் பெறுகின்றான்?
2. மக்களில் மரம் ஆவார் யார்?
3. தமிழ் நூல்களைத் துருவி ஆராய்வதால் தமிழன் உள்ளம் எத்தகைய தென அறிகிறோம்?
4. அன்பைப் பற்றித் தமிழன் உள்ளம் கருதியதென்ன?

TB
031(97)
N57



5. உலகம் நிலைத்திருப்பதற்குப் பெருவழுதி கூறும் காரணங்கள் யாவை ?
6. தமிழர் மக்கட்பண்பெனக் கொண்டவை யாவை ?
7. தீங்கு செய்தவர்க்கு அளிக்கவேண்டிய தண்டனை யாது ?
8. அறிவு எப்போது தொழில் புரியாது ?
9. பூதப்பாண்டியன் கூறிய வஞ்சினங்கள் யாவை ?
10. பூதப்பாண்டியன் கூறிய வஞ்சினத்தால் நாம் அவனைப்பற்றி அறிவன யாவை ?
11. பூதப்பாண்டியனது நண்பர்கள் யாவர் ?
12. தமிழன் உள்ளம் எவ்வாறு விளங்குகிறது ?

86762

### கட்டுரை

பாண்டியன் கூறிய வஞ்சினம். அன்பின் ஆற்றல்.

## 5. சுட்ட பன்றி

ஊன் - இறைச்சி; சிறுமை + ஊர் = சிற்றூர்; புனைந்துரை - கட்டிச் சொல்லுதல்; பஞ்சபூதம் - நிலம், நீர், தீ, வளி, விசும்பு. பேரவா - மிக்க ஆசை; வேறு + ஊர் = வேற்றூர்; ஆவி - உயிர்; அகத்ததோ புறத்ததோ - உண்டோ இல்லையோ.

### வினாக்கள்

1. பகவன் என்பவன் யார் ? அவனது இயல்புகளை எழுது.
2. பகவன் சுட்ட பன்றியின் சுவையை எங்ஙனம் அறிந்தான் ?
3. "நாடினேன், நாடி நான் கண்டுகொண்டேன்" — இடங் காட்டி விளக்குக.
4. ஆதிரையான் குற்றமற்றவன் ஆனது எங்ஙனம் ?
5. சுட்ட பன்றியின் சுவையை ஊரார் அறிந்த விதத்தை எழுதுக.
6. விறகு, பன்றி இவைகளின் விலை ஏன் உயர்ந்தது ?
7. ஊரார் சுட்ட இறைச்சியின் சுவையை எங்ஙனம் அறிந்தனர் ?
8. நாகரிகம் பெற்றவுடன் ஊன் உண்பதில் ஏற்பட்ட மாற்றமென்ன ?

### கட்டுரை

1. பண்டைக்கால மக்களது நாகரிகமற்ற வாழ்க்கை.
2. பகவனது வரலாறு.

## 6. வாணிகம்

நனி-மிகுதி, உரிச்சொல்; மேற்கு + நாடு = மேனாடு; பல + ஆயிரம் = பல்லாயிரம்; நுனித்து அறிந்து - கூர்ந்து அறிந்து; பறங்கியர் - டச்சுக்காரர்; ஒல்லாந்தர் - போர்ச்சுக்கீசியர்; ஆயம் - சுங்கம்; தண்மை + தமிழ் = தண்டமிழ்; விண்டு - வேறுபடுத்தி; வீறு - பெருமை; வடக்கு + நாடு = வடநாடு; பொலியும்-விளங்கும்.

### வினாக்கள்

1. மக்கள் வாழ்விற்கு இன்றியமையாத தொழில்கள் யாவை ?
2. பண்டமாற்று நம் நாட்டில் இன்னும் எவ்வகையில் இருந்து வருகின்றது ?

3. வாணிகத்தின் வகைகளை விளக்கி எழுதுக.
4. வாணிகத்தில் சிறந்து விளங்கும் மேனாடுகளின் பெயர்களைக் கூறு.
5. பண்டு இந்தியாவோடு வாணிகம் புரிந்தவர்கள் யார்?
6. தமிழ் நாட்டவருக்கும் மேனாட்டவருக்கும் வாணிகத்துறையில் ஏற்பட்ட தொடர்பை விளக்குக.
7. யவனர் எனப்படுவார் யார்? அச்சொல் எந்தெந்த நூல்களில் காணப்படுகின்றன?
8. பண்டு தமிழர் கப்பலை நன்கறிந்திருந்தனர் என்பதற்குரிய சான்றுகள் யாவை?
9. தமிழ் நாட்டுத் துறைமுகங்கள் யாவை?
10. உலகநாத பிள்ளை அவர்களின் நூலால் நாமறியும் வாணிகச் செய்திகளை எழுது.
11. வாணிகத்தை மேற்கொண்டு வாழ்ந்த தண்டமிழ்ப் புலவர் யாவர்?
12. வாணிகத்தால் தற்போது மேம்பட்டு வாழ்பவர்கள் யார்?

கட்டுரை

தமிழ் நூல்களால் நாமறியும் வாணிபச் செய்திகள்.
பண்ட மாற்றும் பண மாற்றும்.

## 7. நலங்கிள்ளியும் கோவூர்கிழாரும்

எஞ்சாது - குறையாமல்; தலைக்கூடுவென் - சந்திப்பேன்; மீதூர - மேலோங்கிய; வஞ்சி, உழிஞை, நொச்சி - மலர் வகைகளும் திணை வகைகளும் ஆம்; வாளா - சும்மா; கூப்பீடு - அழைக்கும் குரல்; கயம் - குளம்; நோன்வெளில் - வலிய கம்பங்கள்; உருமென - இடிபோல; துப்பின் - வலிமையுடைய; வயமான் - வெற்றியுடைய குதிரை; அறவை - அறமுடையாய்; மறவை - மறமுடையாய்; ஒற்றன் - உளவு பார்ப்பவன்; செற்றம் - கறுவுதல்; இரும்பனை - கரிய பனை; மிலைந்தோன் - அணிந்தவன்; வேறல் - வெற்றி கொள்ளல்.

வினாக்கள்

1. நலங்கிள்ளி என்பான் யார்? அவன் கோவூர்கிழாரை ஏன் நண்பராகக் கொண்டான்?
2. நலங்கிள்ளிக்கும் நெடுங்கிள்ளிக்கும் நடந்த போரை விவரி.
3. முற்றுகையால் ஆவூர் மக்கள் எவ்வாறு வருந்தினர்? அது எவ்வாறு நீங்கியது?
4. இளந்தத்தன் என்பவன் யார்? அவனது துயரம் எவ்வாறு நீங்கியது?
5. கோவூர் கிழார் இளந்தத்தனை எவ்வாறு காப்பாற்றினர்?
6. நலங்கிள்ளி, நெடுங்கிள்ளி என்பவர்களது பகையைப் புலவர் எங்ஙனம் போக்கினர்?
7. கோவூர் கிழாரது குண நலங்களைத் தொகுத்தெழுது.
8. புலவரது வாழ்வு எத்தகையது?

கட்டுரை

பண்டைத் தமிழ்ப் புலவரது வாழ்க்கை.
கோவூர் கிழாரது நற்செயல்கள்.

ஹோமியோபதி பிரஸ், கும்பகோணம்

# SENTAMIL KOVAI

**For Form IV**

**SPECIAL**

EDUCATIONAL ENTERPRISES
KUMBAKONAM